யாழ்ப்பாணம்

# கச்சதீவு உற்சவம் வழமைபோல் நடந்து முடிந்தது

(வேலணை)

கச்சதீவு உற்சவம் உரிய திகதியில் (கடந்த பத்தாம் திகதி) ஆரம்பமாகி பதினன்காம் திகதி சுற்றுப் பிரகாரத்துடன் முடிவடைந்தது.

நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு பீட்டர் துரைரத்தினம் அடிகளார் கடந்த பதினன்காம் திகதி ஞாயிற்றுக்கிழமை பலிப்பூசையை ஒப்

(8 பக்கம் பார்க்க)

விலை ரூபா 1-00 ★

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 பங்குனி 6 ஜ. ஆவ்வல் 22 இதழ் 35

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 19—3—82

**பயிற்சி**

தொழில்முறைப் பயிற்சியுடன் நடைபெறும்.

0 வயறிங், 0 வெல்டிங், 0 மோட்டார் இயந்திரவியல்

பயிற்சி வகுப்பிற்கு மாணவர்கள் 20-03-82 வரை சேர்ந்துகொள்ளலாம்.

சி. ச. ரி.

ஐலன்ட் இன்ஸ்ரிரியூட்
(விகாரைக்குச், சமீபமாக)
58 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (2578)

# சிறிமாதான் சுதந்திரகட்சியின் ஏகதலைவர்!

## அநுரா கூறுகின்றார்

(கொழும்பு)

**"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஏகதலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காதான். தலைவர் சம்பந்தமாகத் தலைமைப்பீடத்தில் மாற்றம் கொண்டுவரத் தேவையில்லை என்று நுவரெலியா-மஸ்கெலியா இரண்டாவது எம். பி. திரு. அநுராபண்டாரநாயக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

பிளவுபட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில், திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் மைந்தன் திரு. அநுரா பண்டாரநாயக்காவும் இணைந்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டபின்னர்: திரு. அநுரா பண்டாரநாயக்கா நேற்று விடுத்துள்ள முதலாவது அறிக்கையிலேயே மேற்படி கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சி இணைப்புச் சம்பந்தமாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் திரு. அநுரா பண்டாரநாயக்காவும் சந்தித்து இணங்கியபோதிலும் இருவரும் கூட்டாக இதுவரை அறிக்கை வெளியிடவில்லை. ஆனல் இணைந்துவிட்டதாக கட்சியில் பிளவு இல்லை என்றும் தாயும் மைந்தனும் தனித்தனியாக அறிக்கை வெளியிட்டு பொதுக்கூட்டங்களிலும் கருத்துவெளியிட்டுள்ளனர்.

திரு. அநுரா பண்டாரநாயக்கா நேற்றுவிடுத்த அறிக்கையில்; ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பீடத்தில் மாற்றம் ஏற்படத் தேவையில்லை என்றும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காதான் ஒரே தலைவி என்றும் கட்சியை மேலும்கட்டி வளர்ப்பதில் தொண்டர்கள் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

## இந்திரா அமைச்சரவை ராஜினமா!

அஸாமில் நெருக்கடி

கௌகாத்தி, மார்ச் 18

அஸாமில் இந்திரா காங்கிரஸ் அமைச்சரவை ராஜினமாச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

அஸாம் முதலமைச்சர் தமது அமைச்சரவையின் ராஜினமாக்கடிதத்தை அஸாம்மாநில கவர்னரிடம் சமர்ப்பித்துள்ளார்.

அஸாம்சட்டசபையை கலைக்கும்படியும் முதலமைச்சர் மாநில கவர்னரை அக்கடிதத்தில் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அஸாமில் மாற்று அமைச்சரவையொன்றை அமைக்க முடியுமென்று இடதுசாரி ஜனநாயக முன்னணியினர் தெரிவித்துள்ளனர். (வெ)

## கம்பன்விழா இன்று ஆரம்பம்

(கொழும்பு)

அகில இலங்கை கம்பன்கழகத்தின் கம்பன் விழாவை இன்று மாலை 5 மணிக்கு அமைச்சர் செ. இராசதுரை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

இன்று தொடக்கம் 21 ம் திகதிவரை நடைபெறவிருக்கும் மேற்படி விழாவின் முதல் இரு நாள் நிகழ்ச்சிகளும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் இறுதி நாள் நிகழ்ச்சிகள் கொட்டாஞ்சேனை விவேகானந்தா மண்டபத்திலும் நடைபெறவிருக்கின்றன.

முதல்நாள் நிகழ்ச்சிகளில் 'தொண்டில் சிறந்தவன் அனுமனா? இலக்குவனா?' என்னும் பொருளில் பட்டிமன்றம் நடைபெறவிருக்கிறது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளை திரு. என்; கே. மயில்வாகனம் விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார். இலக்கிய ஆணைக்குழு, சிறப்புச் சொற்பொழிவுகள் என்பன இத்தினத்தில் நடைபெறும்.

மூன்றும் நாள் நிகழ்ச்சிகள் ஞாயிறு காலை 9.30 மணிக்கு விவேகானந்தசபை மண்டபத்தில் ஆரம்பமாகும். 'திருமுருகாற்றுப்படை' என்ற பொரு

(8ம் பக்கம் பார்க்க)

குறிகாட்டுவான் சம்பவம்:

## சந்தேகநபர்கள் 24 வரை தொடர்ந்து றிமாண்ட்

(ஊர்காவற்றுறை)

புங்குடுதீவு குறிகாட்டுவான் துறைமுகத்தில் இராணுவ வீரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டு துப்பாக்கிகள் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நான்கு சந்தேகநபர்களும் மீண்டும் எதிர்வரும் 24 ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்படவேண்டுமென ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி நேற்று உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிசாரால் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட வேறு நான்கு சந்தேகநபர்களும் இத்திகதிவரையில் விளக்கமறியலில் வைக்கப்படவேண்டும் என்றும் மேலும் உத்தரவிடப்பட்டது.

இவ்வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது, விளக்கமறியலில் வைக்கபபட்டிருந்த சந்தேகநபர்களான தி. பாங்கரன், நா. திலகநாதன், ப. சந்திரபாலன், கா. வாகீசன் ஆகிய நால்வரும் யாழ். சிறைச்சாலையிலிருந்து கொண்வரப்பட்டு மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். ஊர்காவற்றுறைப் பொலிசார் இவ்வழக்கில் க. நவநீதன், க. ஜெகேந்திரன், து. சிவகுமாரன், செ. முருகானந்தன் ஆகிய மேலும் நான்கு சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்செய்தனர்.

மூன்றும், நான்காம் சந்தேகநபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜிம்மி இராசரத்தினம் இச்சந்தேக நபர்கள் இருவரும் குறிகாட்டுவான் கொலை, கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் அல்லவென்றும் இவர்களுக்கு எதிராகவுள்ள சாட்சியங்கள் என்ன என்பதைக் குறிப்பிடாமல் வெறுமனே இவர்கள் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று பொலிசார் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

பயங்கரவாததடைச் சட்டத்தின் கீழ் இச்சந்தேக நபர்களைக் விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்று கோரும் போது அவ்விதம் கோருவதற்கான காரணங்களையும் ஆதாரபூர்வமாகப் பொலிசார் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள் என்றும் ஆனல் அவ்விதம் செய்ய அவர்கள் தவறிவிட்டதால் மூன்றும் நான்காம் சந்தேகநபர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டுமெனவும் விண்ணப்பித்தார்.

1-ம் 2 ம், சந்தேக நபர்

(8ம் பக்கம் பார்க்க)

## ரூ. 20,000 நகைகொள்ளை

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கிழக்கில், ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர் தம்பிமுத்து மகாலிங்கத்தின் வீட்டில் இருபதினயிரம் ரூபா பெறுமதியான நகைகள் நேற்றுக் கொள்ளையடிக்கப்பட்டது. சுன்னகம் பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

வடபிராந்திய போ. வ. சபை

## பஸ்பயணச்சீட்டு பரிசளிப்புவிழா

அமைச்சர் மொகமட் கலந்து கொள்கின்றார்

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யும் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். மொகமட், வடபிராந்திய போக்குவரத்துச் சேவை, வடபிரதேச புகையிரதச் சேவை குறித்து நேரில் ஆராய்வர்.

இதுசம்பந்தமாக ஒரு மகாநாடு யாழ். செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் மூலம் அமைச்சர் விடுத்த அறிவித்த

(8—ம் பக்கம் பார்க்க)

★ யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து கடத்தப்பட்ட

## சிசுவை பொலிஸார் கைப்பற்றினர்! தம்பதிகள் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரிப் பிரசவ வார்ட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட ஒருநாள் சிசுவைப் பொலிசார் கைப்பற்றியுள்ளதுடன், சிசுவைக்கடத்திய பெண்ணையும் அவரது கணவரையும் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

கரவெட்டி மேற்கில் கலட்டி என்ற கிராமத்திலிள்ள வீடொன்றில் பொலிஸார் இச்சிசுவைக்கண்டுபிடித்தனர்.

இச்சிசுவைக் கடத்திய 28 வயதுப் பெண்வைத்திய பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரி 17 'பி' வார்டில் பொலிஸ் பாதுகாப்பில் வைக்சப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை யாழ். ஆஸ்பத்திரிப்பிரசவவார்ட்டிலிருந்து 10—30 மணியளவில் இச்சிசு மர்மமான முறையில் மறைந்தது 'ஈழநாடு' வாசகர்கள் அறிந்ததே.

'ஈழநாடு' பத்திரிகையில் இச்செய்தியை வாசித்தறிந்த புத்தூரைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் சுன்னுகம் பொலிசுக்குத் தகவல் கொடுத்திருந்தாராம்.

சிசுவைக் கடத்திச் சென்ற பெண்ணும் அவரது கணவரும் ஆயுள்வேத டாக்டர்கள் என்றும் விவாகஞ்செய்து 7 வருடகாலமாகியும் மகப்பேறில்லாததால் அவ்வாயிலுள்ள தனது மாமியாரின் நச்சரிப்புத் தாங்க முடியாமல் இப்பெண் புகுந்த

(8-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

துன்பம் தன்னைத்தானே பார்த்துக்கொள்ளும் வல்லமையுள்ளது: ஆனால் இன்பத்துக்கோ அதனைப் பகிர்ந்தகொள்ள வேறொன்று தேவைப்படும்.

— மார்க் டுவெயின்

# நமது நோக்கு

## வல்லரசுகளின் டெஸ்ற் போட்டி

இது கிரிக்கெட் 'சீசன்'. பார்த்த இடமெல்லாம் டெஸ்ற்போட்டி செய்திகள், நேரடி வர்ணனைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஆங்கில நாகரிக ஆதரவாளர்கள் மட்டுமல்ல, சாதாரண கிராமவாசிகளையுமே இது பீடித்துவிட்டது.

எனவே இன்று உலக அரங்கில் நிகழும் அரசியல் போட்டியும் 'டெஸ்ற் ஆட்டம்' பாணியில் புரிந்துகொள்வது எளிதாகின்றது.

இதில் ஒரு விபரீதம் நாம் முன்கூட்டியே கவனிக்கவேண்டியது. முதலாளித்துவ அமெரிக்காவும் கம்மியூனிஸ்ற் சோவியத் ரஷ்யாவும் கிரிக்கட் விளையாடும் தேசங்களல்ல: அதில் விருப்பங் கொண்டவையும் அல்ல.

கம்யூனிஸ்ற் ரஷ்யா கிரிக்கட் ஒரு ஏகாதிபத்தியவாதிகளின் பொழுதுபோக்கென்று கண்டனம் தெரிவிப்பது வழக்கம். அமெரிக்கா அவ்வாறு கேலி செய்யமுடியாதென்பது தெரிந்ததே. கிரிக்கெட்டை தாம் எப்பவுமே விரும்பியதில்லையென்று களிப்படையும் அமெரிக்கர் அது ஒரு சோம்பேறிகளின் விளையாட்டென்று மட்டந்தட்டி வருகின்றனர்!

இவ்விரு வல்லரசுகளும் உலக ஆதிக்கமென்ற 'வெற்றிக் கிண்ணத்துக்கு' 'டெஸ்ட்' ஆட்டத்தில் இறங்கியுள்ளனர். வேறெந்த நாடுகளுக்கும் இந்த அந்தஸ்து இன்னும் கிடைக்கவில்லை.

கிரிக்கெட் ஆட்டத்தில் என்றுமே பங்குபற்றாத காரணத்தால் அவர்களின் சார்பில் இரு 'டெஸ்ற்' நாடுகள் ஆட்டத்தில் கலந்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

அவை அமெரிக்கா சார்பாக பாகிஸ்தானும், ரஷ்யா சார்பாக இந்தியாவும்; இது இந்தியாவின் அணிசேராக் கொள்கையை சற்றேனும் பாதிக்காது பாகிஸ்தான் ஆட்டம் தொடங்க அவசரப்படுவது வழக்கம்: இந்தியா விளையாட்டைப் பகிஷ்கரிக்க முடியுமா?

இன்னொரு விபரீதம் சிந்தனைக்குரியது. ஆங்கிலேயர் கண்டுபிடித்த இந்த 'அற்புத' விளையாட்டை அவர்களிலும் மிகத்திறமையாக விளையாடி உலகை இன்புறச் செய்தவர்கள் இந்தியர்கள். அது இந்தியா ஒரு தேசமாக இருந்தகாலம்.

ஆங்கிலேய ஏகாதிபத்தியம் ஒரு மாபெரும் தேசத்தை ஆளும் வல்லமையை பிரித்தாளும் திறனால் தேடிக்கொண்டது. அதன் இறுதி விளைவு இந்திய உபகண்டம் இரண்டாகப் பிரிந்தது.

இன்று ஆங்கில ஏகாதிபத்தியம் வறண்டுபோன தொழிய முற்றாக [illegible] போகவில்லை. ஆங்கில மொழியிலும் அதன் கலாசாரத்திலும் அதுகாலம் விடுகின்றது. அந்த இடத்தை அமெரிக்காபிடித்திருப்பது யாவரும் அறிந்ததே.

எனவே கிரிக்கெட் விளையாட அவகாசம் இல்லாத போதும், அமெரிக்கா கிரிக்கெட்டில் காலம் கழிக்கும் பாகிஸ்தானை கைப்பொம்மையாகவைத்து வேண்டிய ஆயுதங்களை வழங்கி 'காஷ்மீர்' என்ற வெற்றிக் கிண்ணத்துக்கு ஆடும்படி ஊக்குவிக்கின்றது. ராணுவ ஆட்சியில் தாழ்வடைந்திருக்கும் பாகிஸ்தான் இந்தியாவுக்கெதிரான யுத்தம் ஒன்று தேவையானால் வரப்போகிற விளைவொன்றையும் ஆலோசிக்காமல் ஆத்திரப்பட்டு விரைவது அதன் இயற்கை.

இந்தோ — பாகிஸ்தான் யுத்தங்கள் மூன்றிலும் வெற்றியடைந்த இந்தியா இன்றைய நவீன யுத்த முறையில் தான் இலகுவாக வெற்றியடையலாமென்று இறுமாப்புக்கொள்வது மடமை. பாகிஸ்தானில் குவிந்திருக்கும் அதியற்புதமான அழிவுக் கருவிகள், விபத்தில் வெடித்தாலே இந்தியாவின் ஒரு பகுதி அழியும் அபாயமுண்டு.

இந்தப் பரபரப்பான நிலையில் சோவியத் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் இந்தியாவுக்கு விஜயஞ்செய்திருப்பதும், அங்குள்ள ராணுவ ஆயுத உற்பத்தி நிலையங்களையும், ராணுவ பாதுகாப்பு நிலைமையையும் நேரில் பார்த்து திருப்தி தெரிவித்ததும் எதனைக் காட்டுகின்றது என்பது எந்தப்பேதைக்கும் விளங்கும்.

'காஷ்மீர்' தான் ஒருசாட்டாக இருந்தபோதும், இங்கொரு போர்மூண்டால் யாருக்கு வெற்றியோ, அவரை ஆதரிக்கும் வல்லரசுக்கு வெற்றியென்ற அர்த்தம்; அவ்வளவில் அதுநிற்பதானால்.

ரஷ்யா இவ்வாறு இந்திய நட்புறவைத்தேடி தன்னைப் பலப்படுத்துவது, சீனாவுக்கு நஞ்சு போன்றது. ரஷ்யதுவேஷத்தாலே அமெரிக்காவுடன் சிநேக மனப்பான்மை வளர்த்துவந்த சீனா இன்று 'தைவான்' பிரச்னையில்சிக்கிக் கொண்டு அமெரிக்காவில் மீண்டும் அவநம்பிக்கை கொண்டுள்ளது.

தாங்களே நேரடியாகப் பங்குபற்றாத ஒரு விளையாட்டில் தங்கள் ஆதரவாளர்களை இறக்கிவிட்டுக் 'கூத்துப்பார்க்கும்' வல்லரசுகள் இதன் விளைவென்னவாயிருக்கும் என்பதை உணரமாட்டாதவையல்ல

அளவு கடந்த நிலையில் ஆயுத பலத்தைத் தேடி வரும் இவ்விருதேசங்களும், தங்களைக் கட்டுப்படுத்தும் நிலையைக் கடந்துவிடுமா என்று அஞ்சும் கட்டம் ஆரம்பமாகிவிட்டதுபோல் தெரிகின்றது

மூன்றாம் உலக நாடுகளுடன் சீனா சேர்வது நம்பக்கூடியது இவை ஒருங்கு சேர்ந்து புரட்சிக்குரல் எழுப்ப முடியுமானால், ஐ. நா வின ஆத்மீகபலத்தை அதிகரிக்க முடியும்.

அதே சமயம், இந்தோ—பாகிஸ்தான் போர் ஒன்று மீண்டும் கிளம்புமானால், அதைப் பரவாமல் தடுக்க முடியுமானால், பாகிஸ்தான் கதியென்னவென்றுசற்பனை செய்வது கடினமல்ல: இன்னிங்ஸ் தோல்வியே!

பட்ட காலிலே படும்; கெட்டகுடியே கெடும்!

---

### பாரதியாரின் பக்திக் கவிதைகள்—3

# பிறந்தது ஞானபாநு

- வ. குகசர்மா -

இறைவனது அருளின் தன்மையை அறிவதற்கு சூரியன் உதாரணமாகவிளங்குகின்றான். சூரியன் இருளை நீக்கி ஒளியைக் கொடுக்க ஆரம்பிக்கும் காலை நேரம் மகிழ்வுடையதாக இருக்கிறது. பறவைகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து சூரியனை வரவேற்கின்றன ''கூவின பூங்குயில் கூவின கோழி குருகுகள் இயம்பின இயம்பினசங்கம்' என மணிவாசகர் இக்காட்சியைப்பாடினர் இந்த நேரத்தில் திருப்பள்ளியெழுச்சிபாடி இறைவனைப் போற்றி மகிழ்ந்தனர் பெரியோர்.

மகாநாராயணோபநிஷத் ஓரிடத்தில் பின்வருமாறு கூறுகிறது: ஆதித்தியனே ஒளி, வீர்யம், பலம், கீர்த்தி எல்லாம் ஆதித்தியன் அழிவில்லாத பரம் பொருள், எல்லா உயிர்களுக்கும் அதிபதி.

பாரதியாரின் வசனகவிதை இதே கூற்றை புதுப்பாணியில் எடுத்துக் கூறுகிறது ''வெம்மைத் தெய்வமே ஞாயிறே ஒளிக்குன்றே, வலிமையின் ஊற்றே ஒளிமழையே, உயிர்க் கடலே'' என்பது பாரதியார் வாக்கு

''இடியும் மின்னலும் நினது வேடிக்கை, மழையும் நின் மகள், மழையும் நின்மகள்'' என்று பாரதியார் சூரியனது புகழைத் தொடர்ந்து பாடுகிறார்.

காலையிலே வேதம் பாடிச் சூரியனை வணங்குதல் ஒருவழக்கம். அந்த வழக்கப்படி பாரதியாரும் ஒருநாள் சூரியனை வணங்கச் சென்றார் ஒருகணத்துளே பல காத தூரமோடும் சூரியனை வாழ்த்தச் சென்றார். உண்மையை மறைத்து நிற்கும் மாயைபோல சூரியனை மேகம் மறைத்து நிற்கிறது. மறைவை நீக்கி சற்றே முகம் காட்டும்படி ஆதவனை வேண்டிப் பாடினார்

''வேதம் பாடிய சோதியைக் கண்டு
வேள்விப் பாடல்கள் பாடுதற் குற்றேன்
நாதவார்கட லின்னொலியோடு
நற்றமிழ்ச்சொ லிசையையும் சேர்ப்பேன்
காத மாயிர மோர்கணத் துள்ளே
கடுகியோடும் கதிரினம்பாடி
ஆதவா நினை வாழ்த்திட வந்தேன்
அணிகொள் வான்முகம் காட்டுதி சற்றே''

வெளியேயுள்ள தெய்வ ஒளியை வணங்குவது உள்ளத்தில் ஒளியைப் பதித்துக்கொள்வதற்குத்தான். உள்ளத்தில் ஒளியிருந்தால் எச்செயலும் சிறக்கும். ''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்' என்பது பாரதியார்.

உள்ளத்தின் ஒளியை ஞான சூரியன் என அழைத்தனர். ஞானசூரியன் இல்லாத உள்ளம் இருண்ட உள்ளம் 'உண்மையில் ஆதித்தியன் அந்தப் பரமாத்மாவே'' எனக் கூறுகிறது உபநிஷத். ''அந்த ஒளியில்லாத இருண்ட உள்ளம் கெட்ட எண்ணங்கள், கெட்ட செயல்கள், நோய்கள் விபத்துக்கள் அறியாமை முதலாய இயமனுடைய பாசக்கயிறுகளுக்கு இலக்காகின்றன'' என உபநிஷத் மேலும் கூறுகிறது. இந்தக்கருத்தைப் பாரதியார்

''கவலைகள் சிறுமை நோவு
கைதவம் வறுமைத்துன்பம்
அவலமா மவத்தைக் காட்டில் அவலமாம்
புலமை அச்சம்
இவையெலாம் அறியாமை
என்பதோர் இருளிற் பேயாம்''

என மிகத்தெளிவாக எடுத்துக் கூறுகிறார்.

பாரத தேசம் ஞானத்தினாலே சிறப்படைந்த நாடு. அரசாட்சி, போர், வீரம், வாழ்க்கை யாவற்றிலும் தெய்வ ஒளி கலந்திருந்தது. அதனாலேயே நீதி ஓங்கியது. செய்யும் முயற்சியெல்லாம் சீருடன் ஓங்கியது. இந்திய தேசத்தில் புகழ் உலகெல்லாம் பரவியது இந்தியாவின் புகழ் உலகெலாம் பரவ ஞான சூரியனே காரணம் எனக் கூறும் பாரதியின் தெய்வபக்தி போற்றப்படவேண்டியதும் நமக்கு வழிகாட்டியாகவும் உள்ளதாகும்.

'திருவளர் வாழ்க்கை கீர்த்தி
தீரம் நல்லறிவு வீரம்
மருவுபல் கலையின் சோதி
வல்லமை யென்ப தெல்லாம்
வருவது ஞானத் தாலே
வையக முழுது மெங்கள்
பெருமைதா னிலவி நிற்கப்
பிறந்தது ஞான பாநு.

---

# அன்பர்துயர் நீக்கும் வண்ணை வைத்தீஸ்வரன்

வரலாற்றுச் சிறப்புமிக்க ஈழத்துச் சிவஸ்தலங்களுள் ஒன்றாக விளங்குவது வண்ணை. வைத்தீஸ்வரன் ஆலயம். இவ்வாலயத்தின் பெருமைக்கும் பழமைக்கும் சான்றாக விளங்குவதே இவ்வாலயதின் நியமம்தவறா இயல்பாகும்.

இவ்வாலயம் 192 வருடங்களாக சைவாகம முறைப்படி பூசைகளையும், விழாக்களையும் நடத்திவருகிறது.

குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் கொண்டு விளங்கும் வைத்தீஸ்வரனின் பொற் பாதங்கள் அல்லல் நீக்கி அருளும் இயல்பினன் தனக்குவமையில்லாதானாகிய அவனுடைய தாள்களே மனக்கவலை தீர்க்கும் மருந்தாகும்.

சைவம் என்னும்பயிர்வளர்க்கும் எழிலியாகிய நாவலர் பெருமான் தமது முதற்பிரசங்கத்தைச் செய்ததும் இந்த ஆலயத்தில்தான். சைவத்துக்குத்தளர்ச்சி ஏற்பட்ட நேரங்களில் எல்லாம் கண்களில் கண்ணீர் மல்க சைவத்தின் நிலை குறித்து இறைவனுக்கு விண்ணம் செய்ததும் இந்த ஆலயத்தில்தான் பற்றற்ற சிவயோகமுனிவர் தையல்நாயகியைச் சிறப்பித்துப் பாடியதும் இந்த ஆலயத்தில்தான்.

பல சிறப்புகளும் வாய்ந்த இச் சிவஸ்தலத்திலே சென்ற ஆண்டு வெகுசிறப்பாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இப்பொழுது 5 நிலைக் கோபுரத் திருப்பணி மிகவேகமாக நடைபெற்றுவருகிறது.

இவ்வாலயத்தின் மகோற்சவம் இன்று ஆரம்பமாகின்றது. இன்று காலை 11.30மணிக்கு பூஜையும் 12.30 மணிக்கு துவஜாரோகணமும் நிகழும்

5-4 82 திங்கள் காலை 7.30 மணிக்கு பஞ்சரதாரோகணமும் மாலை 4 மணிக்கு ரதஅவரோகணமும் மண்டபப்படியும் பஞ்சமூர்த்திகள் வசந்த மண்டபம் சேர்தலும் நிகழும்.

6—4-82 செவ்வாய் தீர்த்த உற்சவமும் நிகழும்.

திருவிழாக் காலங்களில் தினமும் தேவஸ்தான வித்துவான் வி. கே. ஆறுமுகத்தின் கதாப் பிரசங்கம் நடைபெறவுள்ளது.

---

## ''விரைவில் இருமடங்கு சகாயம் பெறுவர்''

(அரியாலை)

''சமீப காலமாக சங்கம் மேற்கொண்ட புதிய நடவடிக்கைகள் காரணமாகச் சங்கத்தில் புதிய அங்கத்தவர்களின் தொகை நாளுக்குநாள் அதிகரித்துவருவதுடன் சந்தாவின் தொகையும் அதிகரித்துள்ளது. இப்பணத்தை வங்கிகளில் இருப்புச் செய்வதின் மூலம் அதிக வருமானமும் சங்கத்துக்குக்கிடைத்து வருகிறது. விரைவில் இச்சங்கத்திலிருந்து சகாயம் பெறுவோர் இரண்டு மடங்கு சகாயத்தைப் பெறக்கூடிய சூழ்நிலைஏற்பட்டு வருகிறது.''

இவ்வாறு வண்ணைவைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கத்தின் நாற்பத்தெட்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப்பேசிய சங்கத்தலைவர் திரு. து. விசுவநாதன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஆசிரியர்கள் குறைந்த வேதனத்தைப் பெற்ற காலத்தில், அவர்களுக்கெனப் பென்ஷன் திட்டம் இல்லாமல் இருந்த காலகட்டத்தில் அமைக்கப்பட்ட இச்சகாய நிதிச் சங்கம் ஆசிரியர்களின் வாழ்க்கைக்கு அன்று கை கொடுத்து உதவியது. வங்கிகளில் சேமிப்புச் செய்தால் நல்லவட்டி கிடைக்குமென்று வங்கிகள் மாறிமாறிப் பிரசாரம் செய்யும் இக்காலத்திலும், ஆசிரியர்கள் இச் சங்கத்தில் நம்பிக்கை வைத்து இதில் அங்கத்தவர்களாகி, தமக்குப் பின்னுள்ளவர்களுக்குச் சகாயம் கிடைக்கும் என்ற பூரண நம்பிக்கையுடன் செயல்பட்டுவருவது பாராட்டுக்குரியதாகும்'' என்றார்.

பொதுச் செயலாளர் திரு. எஸ். சிவராசா வருடாந்த அறிக்கையையும், பொருளாளர் திரு. எஸ். குணபாலசிங்கம் வருடாந்த கணக்கறிக்கையையும் சமர்ப்பித்தனர். இதனைத்தொடர்ந்து புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது.

(அ)

---

## இப்பாடசாலை அபிவிருத்தி பெறும்

[கிளிநொச்சி]

பரந்தன் குமரபுரம் இந்து கனிஷ்ட வித்தியாலயத்தில் மலசலகூடம் நிரந்தர வேலி அமைப்பதற்கும், பாதுகாப்பு அதிகாரியை நியமிப்பதற்கும் புதிய அதிபர் திரு வே. பஞ்சாட்சரம் முயற்சிமேற்கொண்டுள்ளார். இதற்கு இப்பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்பைப் புதிய அதிபர் நாடியுள்ளார். [அ]

# இந்திய ராணுவ பலத்தை வலுவாக்க சோவியத் உதவும்!

## உஸ்டினேவ் மீண்டும் வலியுறுத்துகிறார்

புதுடில்லி, மார்ச். 18

''இந்தியாவின் ராணுவ பலத்தை மேலும் வலுவாக்குவதற்கு சோவியத் யூனியன் உதவி புரியும்''.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள சோவியத் பாதுகாப்பு அமைச்சர் திரு. டிமிட்ரி உஸ்டினேவ் மீண்டும் இவ்வாறு வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

தெற்காசியாவில் சமாதானத்தையும் சமபலத்தையும் நிலைநாட்டுவதற்கு இந்தியா தனது பலத்தை வலுப்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்கு சோவியத் யூனியன் உதவிபுரியுமென்று அவர் கூறினார்.

இந்துஸ்தான் கனரக உற்பத்தி நிலையத்துக்கு விஜயம் செய்த திரு. உஸ்டினேவ் அங்கு ஒரு கூட்டத்தில் உரைநிகழ்த்தினார்.

இந்நிலையத்தில்தான் இந்தியாவுக்கான சோவியத் மிக் விமானங்களும், ஜோகுவா விமானங்களும் தயாரிக்கப்படுகின்றன.

## இலங்கைக்கு பி. பி. சி. அதிகாரி விஜயம்

லண்டன், மார்ச். 18

பி. பி. சி. தமிழ்ச்சேவையின் நிர்வாக அதிகாரி திரு. ஜான் கிளாப்பம் மார்ச் 24ம் தேதியிலிருந்து 30ம் தேதிவரை இலங்கையில் தங்கியிருப்பார். 26 லிருந்து 28 வரை யாழ்ப்பாணத்திலும் எஞ்சிய நாட்களில் கொழும்புநகரிலும் இருப்பார். இலங்கையின் செய்தித்துறைஅன்பர்கள், ஒலிபரப்பாளர்கள், அரசியல்வாதிகள் ஆகியவர்களுடன் குறிப்பாக நம் தமிழோசை நேயர்களையும் நேரில் கண்டு அளவளாவ வேண்டும் என்பதே இந்த விஜயத்தின் நோக்கம்.

1956ல் இந்தியாவின் மேற்கு வங்கமாநிலத்தில் 'மெதடிஸ்ட் சர்ச்' சமயப் பணியை முன்னிட்டு விஜயம் செய்தபோது இடைவழியில் முன்னர் இலங்கைக்கு வந்திருக்கிறார். என்றாலும், 1972ல் பி. பி. சி.யில் சேர்ந்த பிறகு, இதுவே திரு. ஜான் கிளாப்பம் அவர்களின் முதல் இலங்கை விஜயமெனலாம். இலங்கையின் நிலைமையை நேரில் காணும் வாய்ப்பு இதன் மூலம் அவருக்குக் கிடைத்திருக்கிறது.

'தமிழோசை' செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாட்களிலும், 'வண்ணக் கதம்பம்' ஞாயிறுதோறும் இலங்கை நேரப்படி இரவு 9.45 லிருந்து 10-15 வரை 25, (11·955 MHZ), 41 (7·155 MHZ), 49 (6·165 MHZ) மீட்டர்களில் ஒலிபரப்பாகிறது.

## கேரளத்தில் மீண்டும் ஜனாதிபதி ஆட்சி

புதுடில்லி, மார்ச். 18

கேரள மாநிலத்தில் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு பதவியிலிருந்த இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சி பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து அங்கு சட்டசபை கலைக்கப்பட்டது. கேரளத்தில் கடந்த பத்து ஆண்டுகளில் பதவிக்கு வந்த ஏழாவது அரசாகும் இது.

இந்திராகாங்கிரஸ்கட்சியின் முதலமைச்சரான திரு. கருணாகரன் கடந்த டிசம்பர் மாதம் இரண்டாம் முறையாக அரசு அமைத்து பதவிக்கு வந்தார்.

மாநில அரசு கலைக்கப்பட்டுவிட்டதால் கேரளத்துக்கான பட்ஜட் இனி மத்திய பாராளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்படும்.

## ஹரிசனங்களுக்கு வேலைவாய்ப்பு

சென்னை, மார்ச். 18

தமிழ்நாட்டில் ஹரிசனங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் விதத்தில் 14 நூற்பு ஆலைகளை தமிழ்நாடு அரசு ஆரம்பிக்கவிருக்கின்றது.

ஹரிசனங்களின் வீட்டு வசதிக்கென 2 லட்சம் வீடுகளைக் கட்டவும் அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஹரிசன நலத்துறை அமைச்சர் திரு. விஜயசாரதி இத்தகவலை வெளியிட்டார்.

## ராஜ்யசபா வேட்பாளர்

புதுடில்லி, மார்ச். 18

ராஜ்யசபா தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலை, இந்திரா காங்கிரஸ் நேற்று வெளியிட்டது.

இந்தப் பட்டியலில் 28வேட்பாளர்கள் இடம் பெற்றுள்ளனர்.

உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய பகுதிகளுக்கு வேட்பாளர் பற்றி இறுதிமுடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. (க)

## பாகிஸ்தானில் 3500 பேர் கைது

கராச்சி மார்ச் 18

பாகிஸ்தானில் நடந்துவரும் கிளர்ச்சி தொடர்பாக இதுவரை 3500 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் காஷ்மீரில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த 160 தலைவர்களும், உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டு சிறைத்தடுப்புக் காவலில்வைக்கப்பட்டுள்ளனர்.

கராச்சியில் 210 பேரும், சிந்துமாகாணத்தில் 26பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து பல இடங்களில் கிளர்ச்சி நடைபெற்று வருகின்றது. (க)

## வரணிகொள்ளை வழக்கு: எதிரிகள் விடுதலை!

(சாவகச்சேரி)

வரணி இயற்றாலை கள்ளுத் தவறணை கொள்ளை வழக்கில் விசாரணை முடிவில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எச். எம். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் வறணி இயற்றாலையைச் சேர்ந்த இளையவன் சின்னத்தம்பி. பொன்னன் செல்வராசா ஆகியோர் தவறணை விற்பனைக்காரர் திசவீரசிங்கத்தை தாக்கி 1409 ரூபா 09 சதத்தைக் கொள்ளையடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி வி. செல்லத்தம்புவும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் ஆஜரானார்கள். [க]

## களனி காலரா பகுதியாக பிரகடனம்: 8 பேர் பலி!

[கொழும்பு]

களனிப்பகுதி வாந்திபேதி (காலரா) நோய்ப் பகுதியாக அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள ஆற்று நீரைப் பயன்படுத்துவதற்கும தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கொலன்னாவ, ஜாஎல, பேலியகொட ஆகிய இடங்களிலும் வாந்திபேதி நோய் பரவியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

வாந்திபேதி நோயினால் இதுவரை 8பேர் இறந்துள்ளதாகவும், இந் நோயினால் 68 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா தெரிவித்துள்ளார். [வெ]

## பாகிஸ்தானில் அரசியல் கூட்டங்களுக்குத் தடை

கராச்சி மார்ச் 18

பாகிஸ்தானில் எதிர்க்கட்சிகள் ஆட்சேபக் கூட்டங்களையோ, அரசியல் ஊர்வலங்களையோ நடத்தக்கூடாதென்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைகொள்ளச் செய்வதற்கான ஒன்றிணைந்துள்ள எதிர்க்கட்சிகள் ஏழு அம்சக் கோரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. கைது செய்யப்பட்டுள்ள அரசியல் தலைவர்கள், மாணவர்கள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். பொருட்களின் விலைகள் குறைக்கப்படவேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை இவர்கள் விடுத்துள்ளனர்.

## தேசிய விருதுகள்

புதுடில்லி மார்ச். 18

மூன்று பெண்கள் உட்பட 15 கைவினைஞர்களுக்கு தேசிய விருதுகள் நேற்றுவழங்கப்பட்டது.

5000 ரூபா ரொக்கப் பணமும், தாமரை கேடயமும், அங்கவஸ்திரமும் வழங்கப்பட்டன. (க)

## இந்திய தளபதி பிரான்ஸ் விஜயம்

புதுடில்லி, மார்ச் 18

பாரத இராணுவ தளபதி திரு. கிருஷ்ணராவ் பிரான்சிற்கு புறப்பட்டார். இவர் புறப்படுமுன் பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். (க)

## சுஹார்ட்டோ எச்சரிக்கை

ஜகர்த்தா, மார்ச். 18

''வல்லரசு நாடுகளின் சூழ்ச்சிக்குள் அணிசேராநாடுகள் சிக்கிவிடக்கூடாது செல்வந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமிடையிலான இடைவெளி அதிகரித்துள்ளது. வளர்முகநாடுகள் இன்று பெரும பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளன'' என்று இந்தோனேசியா ஜனாதிபதி சுஹார்ட்டோ இந்தோனேசியாவிற்கான டுனீசியா தூதுவருக்கு நியமனப்பத்திரத்தை கையளித்து உரையாற்றுகையில் கூறினர். (வெ)

## குற்றம் நிரூபணமில்லை

(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தின் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் திரு. கொப்கேடுவ. முன்னாள் கம்பளை எம். பி. திரு. தயாரத்ன ஆகிய இருவருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரித்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு, இவர்கள் இருவரும் குற்றவாளிகள் இல்லை என்று தெரிவித்திருக்கிறது.

ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையில் குழு இதனைத் தெரிவித்திருந்ததை ஜனாதிபதி நேற்று அமைச்சரவையில் தெரிவித்தார். (இ—ம)

## பிரதேசசபையின் தலைமைப் பதவி

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விரைவில் அமைக்கப்படவுள்ள பிரதேச சபையின் தலைமைப் பதவியை கைப்பற்றிக் கொள்வதில் சில கிராமோதயசபைத் தலைவர்கள் இப்போதிருந்தே பிரசார வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதேச சபைகள் அடுத்த அங்குராப்பணம் செய்து வைகக்கப்படவுள்ளன.

## விழிப்புக்குழு

[பண்டத்தரிப்பு]

பனிப்புலம் கிராமத்தில் பொலிஸ் - பொதுமக்கள் விழிப்புக்குழு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகரினால் இந்த விழிப்புக்குழு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

## ஐரோப்பாவுக்கு ஆயுர்வேதமருந்து

(கொழும்பு)

இலங்கை ஆயுர்வேத மருந்துவகைகள் ஐரோப்பாவிற்கு ஏற்றுமதிசெய்யப்படவிருக்கிறது என்று சுதேச வைத்தியதுறை அமைச்சர் டாக்டர் சேனா அட்டிகல தெரிவித்தார். (க)

### கனேடிய அரசின்

## சமஷ்டி எம். பி.க்களுக்கு மலகூட ஆசனங்கள்!

### ''குவபெக்'' மாகாண அரசு அனுப்புகிறது

குவபெக்சிட்டி, மார்ச். 18

கனடாவில் குவபெக் மாகாண அரசின் ஆளும்கட்சியினர் ஒட்டாவாவிலுள்ள மத்திய சமஷ்டி அரசின் எம் பி.க்களுக்கு மலகூடங்களில் பாவிக்கப்படும் 74 இருக்கை ஆசனங்களை (டொய்லட் பவ்ல்ஸ்) விலைக்கு வாங்கி அனுப்பவிருக்கின்றனர்.

கனேடிய அரசியல்சட்டம் பிரிட்டனிலிருந்து அனுப்பப் படவிருப்பதற்கும், அதன் ஆரம்ப திகதியை மாற்றுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளையும் ஆட்சேபிக்கும் முகமாக குவபெக் மாகாண ஆளும்கட்சியினர் இந்த நடவடிக்கையை எடுக்கவிருக்கின்றனர்.

கனேடிய அரசியல் சட்டத்தை சமஷ்டி அரசிடம் ஒட்டாவாவில் வைத்து எலிஸபெத் மகாராணிகையளிக்கவிருக்கும் நிகழ்ச்சியையும் குவபெக் பிரதமமந்திரி திரு. றெனெ லெவஸ்டே பகிஷ்கரிக்கவிருக்கின்றார்.

ஆரம்பத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்ற சட்டமாகவிருந்த 114 வருடப்பழமை கொண்ட இந்தஆவணத்தில் உரிமைச் சாசனமொன்றை இணைப்பதற்கும் திருத்தம் ஒன்றைப் புகுத்துவதற்குமான நகல் சட்டம் ஒன்று மிக விரைவில் லண்டனில் உள்ள பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் படவிருக்கின்றது.

இதையடுத்து கனேடிய சமஷ்டி அரசிடம் அரசியல் சட்ட ஆவணத்தைக் கையளிக்கும் வைபவம் ஏப்ரல் மாதம் நடக்குமென்றும் இரு நாடுகளினதும் அரச தலைவரான எலிஸபெத்மகாராணியார் அவ்வைபவத்துக்குத் தலைமை வகிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சமஷ்டி அரசில் அங்கம் வகிக்கும் குவபெக் தொகுதிகளின் எம். பிக்களுக்கே இந்த மலசலகூட இருக்கைகள் அனுப்பப்படவிருக்கின்றன. இது பற்றி குவபெக் மாகாண அரசின் ஆளும் கட்சி விடுத்துள்ள அறிக்கையில், ''இந்த எம் பி.க்கள் எமக்கு இதுவரைசெய்துள்ள சேவைக்கு அவர்கள்இதைத் தவிர வேறு ஆசனங்களில் அமர்வதற்கு தகுதியிருப்பதாக எமக்குத் தெரியவில்லை'' என்று கூறியுள்ளனர்.

# சென்றல் - சென்ஜோன்ஸ்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)
ஓட்டங்களுக்கு 1 விக்கட்டை யும் பெற்றது குறிப்பிடத்தக் கது.

**பரிசு பெற்றோர்:**

வெளிரேமலே 102 ஓட்டங் களைப் பெற்ற பரி. யோவான் கல்லூரியைச் சேர்ந்த எஸ். சீவநாயகம் சிறந்த துடுப் பெடுத்தாளனாகவும். முதலா வது ஆட்டத்தில் 33 ஓட்டங் களுக்கு 5 விக்கட்டுகளையும், இரண்டாவது ஆட்டத்தில் 48 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுக ளையும் பெற்ற பரி. யோவான் கல்லூரியைச் சேர்ந்த ஆர். சிவகுருநாதன் சிறந்த பந்து வீச்சாளனாகவும், எல்லா வகை யிலும் சிறந்து வீரனாக யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த வி. பி. பிரகலாதனும், சிறந்த பந்துவடுப்பாளராக யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம். வி. சவுந்தரநாயகமும், தெரிவு செய்யப்பட்டு பரிசு பெற்றனர். விளையாட்டில் சிறந்த வீரனாக யாழ். பரி. யோவான் கல்லூரியைச் சேர்ந்த எஸ். சீவநாயகமும் தெரிவு செய்யப்பட்டு பரிசு பெற்றார்.

**விளையாட்டு நேரம்:**

9.30 மணி முதல் 12.30 மணிவரை
1.10 மணிமுதல் 3.10 மணி வரை
3.30 மணிமுதல் 5?40 மணி வரை

இவ்வரும் கடந்த ஆண்டுகளை விட ஆரப்பிக்கும் நேரம் 10 30 மணியிலிருந்து 9.30 மணியாக மாற்றப்பட்டிருக் கிறது.

**மத்தியஸ்தர்கள்:**

இவ்வருடப் போட்டிக்கு மத்தியஸ்தர்களாக திருவா ளர்கள் டி. எம்: வேதாபரண மும், வி. பாலசிங்கமும்நியமிக் கப்பட்டுள்ளார்.

நடுவர் குழுவில் திருவாளர் கள் ஏ. நவரத்தினமும், வின்ஸ்ரன் டி.வில்லியம்ஸ்சும், சி. சூரியகுமாரும் கடமை யாற்றுவார்கள்.

## யாழ். மத்திய கல்லூரி வீரர்கள் விபரம்:

கே. தோமஸ் அணியின் தலைவர். 5 வது வருட சிறப்பு விருது பெற்ற ஆட்டக்காரர். மிக விரைவாகச் சுழல் பந்து வீசுவதில் வல்லுநர். மைதா னத்தில் எந்த இடத்திலும் நின்று பந்துகளைத் தடுப்பதில் தேர்ச்சி பெற்றவர். இவர் இவ் வாண்டில் நடைபெற்ற இர ண்டு போட்டிகளில் நூற்றுக்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்ற வீரனாகத் திகழுகிறார்.

எம். ஆர். மணிவண்ணன்:
இரண்டாம் வருட சிறப்பு விருது பெற்ற வலதுகை துடுப் படி வீரரும், திறமை மிக்க பந்து காப்பாளரும்.

வி. பி. பிரகலாதன்:
4ம்வருட ஆட்டக்காரர் விறு விறுப்பாக ஆடும் ஆட்டக்கா ரர். பந்துகளை ஓங்கி அடிப்ப தில் வல்லுநர். வலது கை நடுத் தர வேகப் பந்து வீச்சாளர்.

கே. உமாசுதன்:
3ம் வருட ஆட்டக்காரர். வலதுகை துடுப்படி வீரர். அணியின் சார்பில் பந்துவீச்சை ஆரம்பிக்கும் வலது கை நடுத் தர வேகப் பந்து வீச்சாளர்.

வி. சுதர்சனன்:
2ம் வருட ஆட்டக்காரர். வலது கை நடுத்தர வேகப் பந்து வீச்சாளர். உமாசுதனு டன் இணைந்து துடுப்பாட் டத்தை ஆரம்பிக்கும் வலது கை துடுப்படி வீரருமாவார். பந்துகளை விசையுடன் அடிப்ப தில் வல்லுநர்.

எஸ். விஷயகுமார்:
2ம் வருட ஆட்டக்காரர். அழகாக ஆடும் கைத் துடுப் பாட்ட வீரர். சுழல் பந்து வீச் சாளர். திடலுக்கு அண்மை யில் நின்று பந்துகளைத் தடுப்ப தில் வல்லவர்.

சோ. சௌந்திரராஜா:
2ம் வருட ஆட்டக்காரர். ஆரம்பத் துடுப்படி வீரர். திறமை மிக்க பந்து தடுப்பா ளர். இவரின் திறமைக்கு இவர் நூற்றுக்கு மேற்பட்ட ஓட்டங் களைப் பெற்றமை எடுத்துக் காட்டாகும்.

எம். பி. சௌந்திரநாயகம்:
2ம் வருட ஆட்டக்காரர் அணியின் நிலைமையை உணர் ந்து சிறப்பாக ஆடுபவர். மிக வும் திறமையான பந்து தடுப் பாளர்.

ஆர். மகிந்தா:
அணிக்குப் புதியவர். பிரதி பந்து காப்பாளர். வலது கை துடுப்பாட்ட வீரர்.

பி. நிமலன்:
அணிக்குப் புதியவர். வலது கைத் துடுப்படி வீரரும் சுழல் பந்து வீச்சாளரும் திடலுக்கு அண்மையில்நின்று பந்துகளைத் தடுப்பதில் திறமை மிக்கவர்.

வி. திலகேசன்:
அணிக்குப் புதியவர். வலது கைத் துடுப்பாட்ட வீரர். மிக வும் திறமை மிக்க பந்து தடுப் பாளர்.

எம். என். கிருபராஜா:
அணிக்குப் புதியவர். வலது கை நடுத்தர துடுப்பாட்ட வீரர். சுழல் பந்து வீச்சாளர்.

ரி. பிரதீபன்:
அணிக்குப் புதியவர். நடுத் தர துடுப்படி வீரர். வலது கை சுழல் பந்து வீச்சாளர்.

கே. பிரபாகரன்:
அணிக்குப் புதியவர். அழ காக ஆடும் வலது கைத் துடுப் படி வீரர். நடுத்தர பந்து தடுப்பாளர்.

ஏ. ஜோன் அலி:
அணிக்குப் புதியவர். திறமை மிக்க துடுப்படி வீரர். சிறந்த பந்து தடுப்பாளர்.

கே. மனோஜ்குமார்:
அணிக்குப் புதியவர். சிறிய வர். வலது கைத் துடுப்படி வீரர். இடது கை நடுத்தர வேகப் பந்து வீச்சாளர். அணி யில் உருவத்தில் மிகவும் சிறிய வர் இவர்.

## பரி.யோவான் கல்லூரி கோஷ்டி வீரர்கள் விபரம்:

டி. எம். இரவீந்திரா:
அணியின் தலைவர். 4ம்வருட சிறப்பான ஆரம்பத் துடுப் பாட்ட வீரர். சிறப்பான நிலை யில் அழகாக ஆடுபவர். வலது கை நடுத்தர வேகப் பந்து வீச் சாளர். விக்கட்டுகளுக்கு அண் மையில் நின்று சிறந்தமுறை யில் பந்துகளைத் தடுக்கும் ஆற் றல் மிக்கவர்.

என். பிரபாகரன்:
அணியின் உபதலைவர், 3ம் வருட ஆட்டக்காரர். மிக விறுவிறுப்பாகஆடக்கூடியவர். அணியின் வெற்றிக்காக நூறு ஓட்டங்களை அடித்த வீரர். வலது கை சுழல் பந்து வீச்சா ளர். பந்துகளைத் தடுத்துப் பிடிப்பதில் இவருக்கு நிகர் இவரே.

யே. எம். யோசேப்:
2ம் வருட ஆட்டக்காரர். கவனமாகவும், அழகாகவும் ஆடும் இடது கைத் துடுப் பாட்ட வீரர். வலது கை சுழல் பந்து வீச்சாளரும், பாதுகாப் பான பந்து தடுப்பாளருமா வார்.

எஸ். விக்ன்பாலன்;
2ம் வருட ஆட்டக்காரர், பந்துகளை வேகமாக அடிக்கும் ஆற்றலுள்ளவர். வலது கைத் துடுப்பாட்ட வீரர். வலது கை நடுத்தர பந்து வீச்சாளர். திற மையானமுறையில் பந்துகளைத் தடுப்பதில் ஆற்றல் மிக்கவர்.

ஆர். மகிந்தா:
2ம் வருட வீரர். மிகவும் கவனமாகவும், வேகமாகவும் பந்து வீசுபவர். வலது கைத் துடுப்பாட்ட வீரர். தேவை யான நேரத்தில் சிலிப்பில் திறமையாக பந்தைத் தடுத் துப் பாதுகாக்கக்கூடியவர்.

எஸ். வரதன்:
2ம் வருட வீரர், மிகவும் கவனமாகவும்,பொறுமையாக வும் ஆடும் வலது கைத் துடுப் பாட்ட வீரர். வலது கை நடுத் தர வேகப் பந்து வீச்சாளர், பாதுகாப்பான பந்து தடுப் பாளர்.

எஸ். அழகன்ராஜ்:
அணிக்குப் புதியவர், வலது கைத்துடுப்படிவீரர், திடலுக்கு அண்மையில் நின்றுபந்துகளைத் தடுப்பதில் வல்லுநர்.

பி. திருக்குமார்:
அணிக்குப் புதியவர், வலது கை நடுத்தர வேக ஆரம்பப் பந்து வீச்சாளர், வலது கை ஆட்டக்காரர், பந்து ஓங்கி அடிப்பதில் வல்லுநர்.

எம். முரளிதரன்:
அணிக்குப் புதியவர், அழ காக ஆடும் வலது கைத் துடுப் படி வீரரும், பந்து வீச்சாள ரும், நடுத்தர பர்து தடுப் பாளருமாவார்.

எஸ், நிர்மலன்;
அணிக்குப்புதியவர். அழகாக ஆடும் வலது கைத் துடுப்படி வீரர். சிறப்புமிக்க பந்து காப் பாளர்.

டி. ஞானரத்தினம்:
அணிக்குப் புதியவர் வலது கை துடுப்பாட்டவீரர் கோஷ் டித்தலைவருடன் இணைந்து ஆட்டத்தை ஆரம்பிப்பவர். கலந்துகொண்ட ஆட்டங்க ளில் எடுத்த ஓட்டங்கள் இவ ரின் திறமைக்கு எடுத்துக் காட்டு சிலிப்பில் திறமையா கப் பந்தைப் பிடிப்பவர்.

எஸ். விஷயராகவன்;
அணிக்குப புதியவர். வலது கைத் துடுப்படிவீரரும், வலது கை நடுத்தர வேகப்பந்து வீச் சாளரும், நடுத்தர பத்துதடுப் பாளருமாவார்.

எஸ். இரவிச்சந்திரன்:
அணிக்குப் புதியவர். வலது கைத் துடுப்படி வீரர் வலதுகை நடுத்தரப் பந்துவீச்சாளர் நடு த்தர பந்து தடுப்பாளர்.

எஸ். உதயகுமார்;
அணிக்குப் புதியவர் வலது கைத் துடுப்படி வீரர் வலதுகை நடுத்தர பந்துவீச்சாளர் நடுத தர பந்து தடுப்பாளர்.

யே. கதிர்காமநாதன்:
அணிக்குப்புதியவர்வலதுகை சுழ்ல்பந்துவீச்சாளர் இடதுகை துடுப்படிவீரர் நடுத்தர பத்து தடுப்பாளர்.

யே. எம். ஜோர்ஜ்:
அணிக்குப் புதியவரும் சிறிய வருமாவர் விறுவிறுப்பாக ஆடும் வலதுகை ஆட்டக்காரர் திடலுக்கு அண்மையில் நின்று பந்துகளைத் தடுத்து நிறுத்துவ தில் வல்லுநர்.

[அரியாலை நிருபர்]

# அராலி சரஸ்வதி வித்தியாலயத்தில் திருவள்ளுவர் விழா

அராலி சரஸ்வதி மகா வித் தியாலயத்தில் திருவள்ளுவர் தினம் கல்லூரியின் இந்து இளை ஞர் மன்றத்தின் தலைமையில் நடாத்தப்பட்டது. மாணவர் கள் மத்தியில் குறள் மனனப் போட்டி. கட்டுரை, பேச்சுப் போட்டிகள் போன்ற பல நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன அன்றைய தினம் வட்டு. இந்துக்கல்லூரிஉபஅதிபர்திரு. பி. சர்வேஸ்வரஐயர் ''திருவள் ளுவரும் திருக்குறளும்'' என்ற தலைப்பில் சிறப்புச் சொற் பொழிவு ஆற்றினர் சங்கத் தலைவி செல்வி. ச. பகீரதி தலைமை தாங்கினர். போட் டியில் வெற்றியீட்டிய மாண வர்களும் சொற்பொழிவாற்றி னார்கள்.

இந்த விழாவில் உரையாற் றிப சங்கப் போஷகர் திரு. ச. மாரிமுத்து ஆசிரியர் தமது பேச்சில் 'திருவள்ளுவர் இயற் றிய தமிழ் மறை தமிழுக்கு ஓர் இலக்கிய நூலகவும்விளங்கு கின்றது. குறட்பாக்களில் அணிகள் நிறைந்து காணப் படுகின்றன. அவை படிப்போ ருக்கு இலக்கிய இன்பத்தை வழங்குகின்ற'' வெனக் குறிப் பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. மு. திருநீலகண்டசிவம் பேசுகை யில் ''குறள் கூறிய வண்ணம் வாழக்கூடிய செயல் துணிவு பெருமளவு அருகிப்போனதா லேயே தமிழர்க்கு இன்று நிர்க் கதியானநிலை ஏற்படலாயிற்று வள்ளுவம் வாழ்கை வளத் துக்கு வகையாக வழிகாட்டு கின்றது. நம் இன மக்கள் பெருமளவுக்கு மேற்கோள் காட்டி பேசவும், எழுதவும் ஆற்றல் பெற்றனரே அன்றி அதனைப் பின்பற்றி வாழத் துணிவற்று போய்விட்டனர். அதாவது, குறள் இன்று பெரு மளவுக்கு ஒரு மேற்கோள் நூலாகி விட்டது'' எனவும் குறிப்பிட்டார்.

உப அதிபர் திரு.ச. அம்மை யப்பர் மேசுகையில் ''திருக் குறள் எக்காலத்திற்கும் எந் நாட்டிற்கும் பொது வான அறங்களை எடுத்துக் கூறுகின் றது என்றும் உலகில் மிக அதி கமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட, சமயச் சார்பற்ற நூல் திருக்குறளே யாகும் என்றும் கூறினர்.

சிறப்பு சொற்பொழிவுஆற்றிய திரு. சர்வேஸ்வரஐயர் ''திருக் குறள் - தமிழ் மறையெனப் போற்றப்படுகின்றது. வேதங் களாகிய மறைகளோ தகுதி யானவர்களுக்கு மட்டுமேபடிப் பிக்கப்படுகின்றன திருக்குற ளில், இல்லறம், துறவறம் ஆகிய அறங்கள் பற்றிக் கூறப் பட்டுள்ளது. வள்ளுவரதுகருத் துக்கள் எவருக்கும், எக்காலத் திற்கும் உரியனவாக அழகுற அமைந்துள்ளன குறளை மாண வர்கள் கற்று, வாழ்க்கையில் பின்பற்றுதலே வள்ளுவருக்கு நாம் செய்யும் கடமையா கும்'' என்றார்.

(அராலியூரான்)

## கிராமோதய சபை
# நெடுந்தீவு கிழக்கு முடிவு இன்னுமில்லை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிழக்கு கிராமோ தய சபைத்தலைவர் தெரிவுக் கான தேர்தலின் முடிவுகள் இன்னமும் அறிவிக்கப்பட வில்லை. கடந்த 7ம் திகதி நடைபெற்ற தேர்தலின் முடி வுகளை அறிவதில் தேர்தலில் கலந்து கொண்டு போட்டி யிட்ட வேட்பாளர்களும் வாக் களித்த இதரபொதுத் தாப னங்களில் தலைவர்களும் நெடுந் தீவு மக்களும் பலத்த ஆர்வம் கொண்டுள்ளனர்.

இத்தேர்தலில் போட்டி யிட்ட நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர்திரு. நா. இராமச்சந்திரனுக்கு ஐந்து வாக்குகளும் அவரை எதிர்த் துப்போட்டியிட்ட கிராம அபி விருத்திச் சங்கத்தலைவர் திரு. வே. சுந்தரலிங்கத்திற்கு நான்கு வாக்குகளும் கிடைத் தன. மொத்தம் அளிக்கப் பட்ட 13 வாக்குகளில் மூன்று வாக்குகள் தகுதியற்றவை எனத் தேர்தல் உத்தியோகத் தராகக் கடமையாற்றிய விசேட சேவை உத்தியோத்த ரால் நீக்கப்பட்டுவிட்டன. மிகுதி ஒரு வாக்குச் சீட்டில் இருவருக்கும் அடையாளமிடப் பட்டுள்ளது. இதுவும் செல்லு படியற்ற வாக்கு எனத் திரு. இராமச்சந்திரன் தெரிவித்த போதும் மற்றைய வேட்பாள ரான திரு. சுந்தரலிங்கம் இதனை ஆட்சேபித்ததால் யாழ். தேர்தல் அதிகாரியின் முடிவுக்குவிடும் பொருட்டு வாக்குச் சீட்டுக்கள் அனைத்தும் முத்திரையிடப்பட்டு நெடுந் தீவு உதவி அரசாங்க அதிபரி டம் சமர்ப்பிக்கப்பட்டது. கிழக்கு கிராமோதைய சபைத் தெரிவுக்கான முடிவு விரை வில் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தலைவராகத் தெரிவு

(புலோலி)

பொலிகண்டி கிராமோதய சபைத்தலைவராக திரு. இரத் தினம் தங்கவேலு ஏகமனதா கத் தெரிவுசெய்யப்பட்டார்.

பொலிகண்டி கிராமிய மீளாய்வு நிறுவனத்தின் தலை வரான திரு. தங்கவேலு சமூக, பொருளாதார அபிவி ருத்தித்துறைகளில் ஈடுபட்டு அதிக ஆர்வத்துடன் செயற் பட்டுவருகின்றார்.

● ● ●

(புலோலி)

பருத்தித்துறை உதவி அர சாங்க அதிபர் பிரிவிலுள்ள அம்பன் கிராம சேவை அலு வலர் பிரிவின் கிராமோதய சபைத்தலைவராக திரு. சி. வி. கார்த்திகேசு தெரிவுசெய் யப்பட்டுள்ளார்,

இக் கிராமோதய சபை அங்குரார்ப்பணத்தின்போது சபைத்தலைவராக திரு. சி. வி. கார்த்திகேசு தெரிவுசெய்யப் பட்டார்

## கள் அருந்தி
# மற்றுமொருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்காலில் கள் அருந்தி இறந்தவர்களின் உள்ளுறுப்பு கள், இரசாயன பரிசோதனைக் காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கள்ளருந்தி மயக்கமடைந் தவர்களில் ஆவரங்காலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சீனி (52 வயது) மந்திகை ஆஸ்பத் திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். அடுத்து கறுத் தான் இராசன்(56 வயது) என் பவர் வீட்டில் மயங்கிவிழுந்து மரணமானார்.

இவ்விருவரின் உள்ளுறுப்பு களும். இவர்கள் அருந்திய கள்ளும் இரசாயனப் பரிசோ தனைக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளன.


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்




நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைக்ளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு ''மேற்கு ஜெர்மனி 'BASF'' தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 12/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்வுட்ஸ் ஸ்தாபனம்
297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 32941-5

Metropolitan

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு

# கொடியும் குறிக்கோளும்

## சின்னமும் நிர்ணயிக்கப்பட்டது

### சங்க கீதம் அமைக்கவும் ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கென சின்னமும், கொடியும் நிர்ணயிக்கப்பட்டுளளது. சங்கத்திற்கு விரைவில் கீதம் ஒன்றும் அமைக்கப்படும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம், மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில், நடந்த சங்கப் பிரதிநிதிகள் சபை மாநாட்டில் ஆய்வுக்குழுவின் சார்பில் முன்னுள் நிர்வாகச் செயலாளரும், தற்போதைய நிதிச் செயலாளருமான திரு. தா. சோதிநாதன் சங்கக் கொடி, குறிக்கோள் சின்னம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கென ஒரு குறிக்கோளும், சங்க சின்னமும், கொடியும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. தமிழர் ஆசிரியர் பணியே தமிழர் உயர்வின் வழி என்பதே இ. த. ஆ. சங்கத்தின் குறிக்கோளாக அமையும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இ. த. ஆ. சங்கத்தின் சின்னத்தில் சுடர், யாழ். மீன், நீர்வீழ்ச்சி, புலி என்பன மேல் உச்சியில் இருந்து வலஞ்சுழியாக அமைந்துள்ளது. இவற்றின் மத்தியில் திருக்குறள் புத்தகம் பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றைச் சுற்றி சங்கத்தின் குறிக்கோளாகிய ''தமிழர் ஆசிரியர் பணியே தமிழர் உயர்வின் வழி'' என்ற வாசகமும் சின்னத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இ. த. ஆ. சங்கத்தின் கொடி சிவப்பாகவும், சிவப்புக் கொடியின் மையத்தில் பொன் மஞ்சள் நிறத்தில் சங்கத்தின் சின்னமும் பொறிக்கப்பட்டிருக்கும். [க]

## ஓசிப்பயணம்: 1 மாதக் கடூழியம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த புகையிரதத்தில் ஓசிப்பயணம் செய்த ஒருவர் டிக்கட் சேகரிப்பாளரிடம் மாட்டிக்கொண்டார்.

அட்டன் வட்டவளையைச் சேர்ந்த க. நல்லையா என்பவர் யாழ். புகையிரத நிலையத்தில் இறங்கி வெளியேறும்போது டிக்கட் சேகரிப்பாளரினுல் பிடிக்கப்பட்டு யாழ், பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது டிக்கட் இன்றி பிரயாணம் செய்தமைக்காக 171ரூ, 40 சதம் அபராதம் விதித்தார்.

அபராதப்பணம் கட்டத் தவறியமைக்காக நீதவான் ஒருமாதக் கடூழியச்சிறைத் தண்டனை விதித்தார். (மா)

## தொலைபேசி வசதி

(பண்டத்தரிப்பு)

சங்கரத்தை உப தபால் நிலையத்திற்கு தொலைபேசி தொடர்புவேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

விரைவில் தொலைபேசிச் சேவை இங்கு உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் படுமென தெரிவிக்கப்படுகின்றது.

அரசு வழங்கும் காணியில்

# இந்துயாத்திரிகர் நிலையம் கொழும்பில் நிறுவப்படும்

(மட்டக்களப்பு)

இந்துசமய வெளிநாட்டவர்கள் தங்குவதற்கு பூரண வசதிகளைக் கொண்ட இந்து யாத்திரிகர் நிலையம் ஒன்று அமைக்கப்படும். இதற்கு கொழும்பு மாநகரில் காணி ஒதுக்கித்தரஅரசாங்கம் உறுதியளித்துள்ளது.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அமைச்சர் இராசதுரை மேலும் கூறியதாவது;

பிரதேச அபிவிருத்தி அமைச்சினுல் கொழும்பில் சகல வசதிகளுடன்கூடிய ''இந்து சமய ஆராய்ச்சி ஆய்வு கூடம்'' ஒன்றை விரைவில் நிறுவப்படவிருக்கிறது என்றும் கூறினுர்.

இவைகள் எல்லாம் எனது தெய்வப்பணியாகவே கருதி செய்துவருவதாகவும், இந்தப் பணிக்கு உலகில் உள்ள பல இந்து ஸ்தாபனங்களும், இந்துக்கள் அல்லாதோரும் ஆதரவு தருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும் எனவும். இது இலங்கைவாழ் இந்துக்களுக்கு பெருமை தேடித்தரும் செயல்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

எழுதுமட்டுவாள் கொலைவழக்கு:

# "இராசையாவும் மகனும் வெட்டியதாக இறந்தவர் என்னிடம் கூறினுர்"

## முன்னுள் தபால் சேவகர் சாட்சியம்

(சாவகச்சேரி)

''சம்பவதினம் நான் எனது வீட்டிலிருந்தேன். அன்றிரவு வன்னியசிங்கம் யோகலிங்கமும், அருட்சோதிலிங்கமும் வந்தார்கள். உங்கள் 'மைத்துனர் சிதம்பரநாதனை வெட்டிப்போட்டார்கள்' என்றுர்கள். நான் உடனே வெட்டுப்பட்ட இடத்திற்கு சென்றேன். நான் போனபொழுது இராசையா வீட்டுப் படலையில் எனது மைத்துனர் கிடப்பதைக் கண்டேன். என்ன நடந்தது எனக் கேட்டேன். கந்தர் இராசையாவும் மகனும் வெட்டிப் போட்டார்கள் என்றுர்''

எழுது மட்டுவாள் கொலை வழக்கில் சாட்சியமளிக்கையில் இளைப்பாறிய தபாற் சேவகர் சிவக்கொழுந்து ஐயாத்தம்பி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வழக்கில் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த கந்தர் இராசையாவும் மகன் சுந்தரலிங்கமும் அவ்வூரைச் சேர்ந்த பஸ்சாரதி சிதம்பரநாதனைகொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி செ, அம்பிகைபாலனும் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாய அவர்களும், எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். சிவலோகநாதன், சட்டத்தரணி வி. செல்லத்தம்பு என்பவர்களும் ஆஜராகினர்.

சாவச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடந்த விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தபாற் சேவர் ஐயாத்தம்பி கூறியதாவது; நான் அவர் கேட்டுக் கொண்டபடி உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்து விட்டு பொலிஸ் நிலையத்திற்கு சென்று எனது வாக்குமூலத்தை பதிவுசெய்தேன்''

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வி. செல்லத்தம்பு குறுக்கு விசாரணை செய்தார்.

சட்டத்தரணி: நீர் ஓர் இளைப்பாறிய தபாற் சேவகர்?—ஆம்.

சட்: நீர் ஓர் கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தீர்?—இல்லை.

ர்ட்: எதிரியாக நின்றீர்?—ஆம்.

சட்: 1981ம் ஆண்டு ஜூலை 20ம் திகதி இரவில் வீட்டில் நித்திரையாக இருந்தீர்?—இல்லை விழிப்பாக இருந்தேன்.

சட்: இரவு எத்தனைமணிக்கு தகவல் கிடைத்தது?— 9 மணிவரையில்,

சட்: யார் வந்தார்கள்?—வன்னியசிங்கம் யோகலிங்கமும், துரைசிங்கமும் அருட்சோதிலிங்கமும்.

சட்; அவர்கள் உமது உறவினர்கள்?—இல்லை.

சட்: இவர்களை உமக்கு நல்லாய்த் தெரியும்?— நீண்டகாலமாக எனக்கு நன்ருகத் தெரியும்.

சட்: அன்றிரவே அவர்களின் பெயரும் உமக்குத் தெரியும்?—ஆம்.

சட்: நீர் பொலிசில் வாக்குமூலமளித்தது எப்போது?—இறந்தவரை வைத்தியசாலையில் அனுமதித்தபின்னர்.

சட்: வீட்டுக்கு வந்தவர்களின் பெயரை நீர் பொலிசில் கொடுத்துள்ளீர்?—ஆம்.

சட்: யோகலிங்கமும் இன்னெருவரும் வந்ததென கூறினீரா?—ஆம்.

சட்: நீதவான் முன்னிலையில் மரணவிசாரணையில் சாட்சியமளித்துள்ளீர்?— ஆம்.

சட்; அப்பொழுதும் யோகலிங்கமும், எனக் கூறினீர்?—எனக்கு ஞாபகமில்லை

சட்: பொலிசிலும், மரணவிசாரணையிலும் சொல்லியதொன்று, இப்பொழுது சொல்வதுவேறென்று?—யோகலிங்கமும் சோதியும் என்றுதான் கூறினேன்.

சட்: ஏன்நீர் சரியான முறையில் குறிப்பிடவில்லை? — மைத்துனர் இறந்த கவலையினுல்.

சட்: கந்தன் இராசையாவும் சுந்தரலிங்கமும் வெட்டினுர்கள் என இறந்தவர் கூறியதாக கூறினீர்?— ஆம்.

சட்: இறந்தவர் சின்னத்தம்பி என்று குறிப்பிடவில்லை?—அவருக்கு இரண்டுபேர் அதனுல் நான் தான் அப்படிக்குறிப்பிட்டேன்.

விசாரணை இம்மாதம் 22ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [க]

## தவக்கால நற்சிந்தனை



இவ்வுலகம் நீ இளைப்பாறும் இடமல்ல. ஆதலால் நீ ஏன் வீணில் சுற்றிலும் பார்க்கிருய்? பரலோகத்தில்தான் உன் வாசஸ்தலம் இருக்க வேண்டியது. ஆகையால் நீ உலககாரியம் அனைத்தையும் வழிப்போக்கனுகப் பார்க்க வேண்டும். அவை எல்லாம் கடந்து போகும். நீயும் அவைகளைப்போல் கடந்து போவாய். அவைகளின்மேல் பற்றுதல் வைக்காமல் யாக்கிரதையாய் இரு. உந்நத சர்வேசுரன் பேரில் நினைப்பாயிரு. உன் மன்ருட்டு இடைவிடாமல் கிறீஸ்துநாதரை நோக்கிச் செல்லக்கடவது. கிறீஸ்துநாதருடைய பாடுகளைத் தியானித்து அவருடைய திருக்காயங்களில் வாசஞ்செய்யப் பிரியப்படு. விலையேறப்பெற்ற திருக்காயங்களில் நீ பக்தியோடு அடைக்கலம் புகுந்தால், துன்ப காலங்களில் வெகு தைரியமாயிருப்பாய்.

(கிறீஸ்துநாதர் அனுசாரம்)

## நாளை துணுக்காயில் மகளிர் குழுக் கருத்தரங்கு

(துணுக்காய்)

வவனியா முல்லைத்தீவு மாவட்ட ப. நோ. கூ. மகளிர் குழுக்களுக்கான கருத்தரங்கு வவனியாவிலுள்ள ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபைகபரியாலயத்தில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் சுமார் 100 மகளிர் குழுபிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இலங்கை கூட்டுறவுச்சபையின் மகளிர் குழுத்தலைவிகளும் பிரதிநிதிகளும் இக் கூட்டத்தில் பங்கு கொண்டனர். நாளை 20ம் திகதி மகளிர்குழுக் கருத்தரங்கு துணுக்காய்ப் பிரதேசத்தில் நடைபெறுகின்றது. இக்கருத்தரங்கை வவனியா மாவட்டக் கூட்டுறவுச் சபைச்செயலாளர். திரு. க. செல்லத்துரை விரிவுரையாளர். திரு. கு. செல்வக்கிருபை ஆகியோரும் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவுக் கல்வி விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. வி. சபாரத்தினமும் இணைந்து நடாத்திவருகிறுர்கள். (அ

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 6ம் திகதி
வெள்ளிக்கிழமை
(19—3—82)

மேடம்: வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அது மேலும் குட்டி போடும், புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படுப்படும்,

இடபம்: இடர்கள் பல தாக்கும், இதயத்தில் எரிமலை குமுறும், உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும்.

மிதுனம்: காதல் விவகாரங்கள் தலைதூக்கும், இனிமையான சம்பவங்கள் இடம்பெறும், களஸ்திரவழியால் பொருள் வரவுக்கு இடமுண்டு, பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும், கண்ணியமான தினம்.

கடகம்: தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம், வேண்டாத விவகாரங்களினுல் வீண் பெயர் கேட்க நேரிடும், நிதியில் நெருக்கடி தோன்றும்.

சிங்கம்: அறிஞர்கள் சந்திப்பு, அறவழியில் ஆர்வம் பிறக்கும், ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும்.

கன்னி: கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும், இருப்பிட மாற்றங்களுக்கான ஆலோசனைகளும் இன்று உருவாகும், அரசினர் ஆதரவும் கிடைப்பதற்கு இடமுண்டு.

துலாம்: இன்று அதிக ஆதாயம் கிடைக்கும், புதுத்தொழில் முறைகளில் மனம் நாடும், நீண்ட பிரயாணத்துக்கும் இடமுண்டு.

விருச்சிகம்: ஏமாற்றத்தின் தாக்குதல் உங்களுக்கு வேதனையைத்தரலாம், குடும்பத்திலும் சிறிய பூசல்கள் தலைதூக்கும், தனிவழிப் பயணத்தை தவிர்த்துக்கொள்ளவும்.

தனு: அதிக ஆசையினுல் அவஸ்தைப்படுவீர்கள், சிலர் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளலாம், சிலரின் குறுக்குவழி தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும், அமைதி நன்று.

மகரம்: பிறருக்கு உதவுவதில் முன்னிற்பீர்கள் இதன் மூலம் பணம் செலவாகும், அரசியல்வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம்.

கும்பம்: முன்னேற்றப் பாதையில் தடைகள் தென்படுகின்றன. தொழில் புரியுமிடத்தில் தொல்லைகள் உருவாகும், சகோதர வழியால் சஞ்சல செய்தி கிடைக்கும், வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மீனம்: வாகனம் செலுத்துவோருக்கு இன்று நன்மதிப்பு கிடைக்கும், தாய்வழி தனவரவுக்கும் இடமுண்டு, கல்வித் துறையில் புதிய உற்சாகம் பிறக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

கண்கவர் நவீன வீட்டுத் தளபாடங்களுக்கு

டில்கா பேணிச்சர் பலெஸ்

234 - 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன் : 8186

வாடிக்கையாளர்களுக்கு பல சலுகைகள் !!

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு — சுமலதா
திசைமாறிய
பறவைகள்

வெஸ்லி [illegible]
தினசரி: 2.30 6.15 9.15
சிவாஜி — விஜயா
ரிஷிமூலம்

சாந்தி யாழ்நகர்
தினசரி 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர். விஜயகுமாரி
பூம்புகார்
—புதிய பிரதி—
கடைசித்தினம் 21.3.82

## புதிய தலைநகரம்


[கொழும்பு]

ஸ்ரீ ஜயவர்த்தன புரத்தை இலங்கையின் புதிய தலைநகரமாக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு உள்நாட்டமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் அமைச்சரவையால் பணிக்கப்பட்டுள்ளார்.

ஏப்பிரல் 29ம் திகதி புதிய பாராளுமன்யம் திறந்துவைக்கப்படுவதையடுத்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர புதிய தலைநகரமாகிறது.

இதேவேளை, பொரளை காசில் வீதியிலிருந்து புதிய பாராளுமன்றக் கட்டடம்வரையான வீதிக்கு 'ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை' என்று பெயரிடவேண்டுமென்ற பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவின் சிபார்சையும் அமைச்சரவை ஏற்றுக்கொண்டது.

[இ—ம]



யாழ். பரியோவான் கல்லூரி கோஷ்டி

ஸ்ரீதர் தினசரி: 2:30, 3:30, 6:30, 9.30
முத்துராமன்—சுஜாதா
உறவுசொல்ல ஒருவன்
20.3.82 முதல் THE SPY WHO LOVE ME
James Bond 007
அடுத்த வெளியீடு
ரஜனிகாந்த் நடித்த
பொல்லாதவன்

மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களுடன்
5-வது வாரமாகக் காட்சியளிக்கிறது
யாழ்.றீகல்
தினசரி10—30, 2—00,
6—30, 9—30 (4 காட்சிகள்)
தனிமரம்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30, 2.30
6.30, 9.30
ஜெய்சங்கர்—விஜயலட்சுமி
வல்லவன் ஒருவன்



யாழ். மத்திய கல்லூரி கோஷ்டி

2-வது ஜனத்திரள் மாதம்
ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

2-வது வெற்றிகரமான மாதம்
ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
பிரதாப்
சுரேகா
தக்காரா
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
DRAGON PRINCESS

லிடோ
(யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி
10.30, 2.30, 6.30, 9.30
சிவாஜி - ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ - பத்மினி
குலமாகுணமா புதிய பிரதி
விரைவில் எதிர்பாருங்கள்
சிவாஜி—கமல்—ரஜனி—ஸ்ரீபிரியா
நடித்த
நட்சத்திரம்

### சென்றல்-சென்ஜோன்ஸ் இன்று மோதல்

# யாழ். பிரபல கல்லூரிகளின் 'பெரிய' கிரிக்கெட் போட்டி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரிக்குமிடையிலான 84வது வருடாந்த மாபெரும் கிரிக்கட் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்றும், நாளையும் நடைபெறவிருக்கிறது.

யாழ். மத்திய கல்லூரிக் கோஷ்டிக்கு கே. தோமாஸ்சும் யாழ். பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டிக்கு டி. எம். ரவீந்திரனும் தலைமை வகிக்கின்றார்கள்.

1970ம் ஆண்டில் நடைபெற்ற 72வது வருடாந்தக் கிரிக்கட்போட்டி யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்றது. அதன் பிறகு கடந்த 10 வருடங்களாக நடைபெற்ற போட்டிகள் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

இவ்வருடம் நடைபெறும் போட்டியில் இருகோஷ்டிகளும் வெற்றி பெறுவதற்கான தீவிர பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இது வரை முடிவுள் அறிவிக்கப்பட்ட 75 போட்டிகளில் 29 போட்டிகளில் யாழ். பரியோவான் கல்லூரியும். 20 போட்டிகளில் யாழ் மத்திய கல்லூரியும் வெற்றிபெற்றன. 26 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

83வது வருந்தாந்தப்போட்டி:

1981ம் ஆண்டு நடைபெற்ற 83வது வருடாந்தப் போட்டியில் முதலாவது முறையாகத துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி எல்லாவிக்கட்கட்டுகளையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது இக் கோஷ்டியைச் சேர்ந்த வி, பி. பிரகலாதன் 58 ஓட்டங்களைப் பெற்றார்.

இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய ஆர், சிவகுருநாதன் 33 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளையும், பி. ஜெயகுமார் 42 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும், ஆர். மகிந்தா 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கட்டையும், யே. எம். யோசேப் ஒரு ஓட்டத்தையும் கொடுக்காமல் 1 விக்கட்டையும் பெற்றனர்.

பரி. யோவான் கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் 8 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 247 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இக்கோஷ்டியைச் சேர்ந்த எஸ். சிவநாயகம் வெளியேறாமல் 102 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனையொன்றை நிலைநாட்டினார், இக்கோஷ்டியைச் சேர்ந்த வி, கதிர்காமநாதன், டி. எம். ரவீந்திரா, டி. எம். இரத்தினராசா ஆகியோர் முறையே 33, 29, 25 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப்பந்துவீசிய கே. உமாசுதன் 48 ஓட்டங்களுக்கு 1 விக்கட்டையும், ஆர். பாலகுமார் 68 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும், வி சுதர்சனன் 57 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

யாழ். மத்திய கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் 8 விட்கட்டுகளை இழந்து 214 ஓட்டங்களைப்பெற்றது. நேரம் முடிவடைந்ததினால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இக் கோஷ்டியைச் சேர்ந்த எஸ். விஷயகுமார், கே. தோமஸ், ரி. ஞானரத்தினசிங்கம் ஆகியோர் முறையே 38, 35, 30 ஓட்டங்களையும், வி. சுதர்சனன் வெளியேறாமலே 37 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களை எதிர்த்துப்பந்து வீசிய ஆர். சிவகுருநாதன் 48 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளையும், என். பிரபாகரன் 1 ஓட்டத்திற்கு 2 விக்கட்டுகளையும், எம். அன்புச்செல்வம் 16 ஓட்டங்களுக்கு 1 விக்கட்டையும், யே. எம். யோசேப் 71

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சட்டநாதர் வீதியில் புதிய வீட்டுடன் கூடிய 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பார்வையிடலாம். நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இ. கமலநாதன், சட்டத்தரணி, ஆடியபாத வீதி, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம். 2561

கோப்பாய் தெற்கில் கிளுவானை ஒழுங்கையில் விடு கட்ட வசதியான 3 பரப்புக் குடியிருப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. த. செல்வவதிமேப்பா அசோகா றேடேர்ஸ், கோப்பாய்தெற்கு, கோப்பாய். 2560

## தேவை

யானை மார்க் குளிர்பானங்கள் சைக்கிள்மூலம் விநியோகிக்க ஆட்கள் தேவை. நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். சிவா ஸ்ரோர்ஸ், 179, சிவன்—பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 2580

மரத்தளபாடங்கள் செய்து சிற்பவேலைகள் செய்வதில் நல்ல அனுபவமுள்ள இருவர் உடனே தேவை. நிரந்தர வேலையும் நல்ல சம்பளமும் கொடுக்கப்படும். நேரில் வரவும். அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 2590

அலுமினிய தொழிற்சாலைக்கு வேலையில் தேர்ச்சியுள்ள ஸ்பின்னர்கள், பொலிசர்கள், பவர்பிரஸ் ஒப்பரேட்டர்கள் உடனடியாகத் தேவை. நேரில் தொடர்பு கொள்க. செல்சன் மெட்டல் இன்டஸ்றீஸ், 118—198, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2586

## ஆங்கில கல்வி

நவீன உலகத்திலுட் பிரவேசிக்க ஒரே ஒரு இரவுகோல் ஆங்கில அறிவேயாகும். இதை எல்லோருக்கும் உகந்த இலகுவானமுறையில் உச்சரிப்புகளுடனும் மொழிபெயர்ப்புகளுடனும் கற்பிக்கின்ற ஒரே ஒரு தமிழ் வார இதழ் 'விளக்கமான ஆங்கிலம்' எங்கும் கிடைக்கும். விலை 2/25. ஆங்கிலம் பிரசுரிப்பாளர்கள், த. பெ. 23, கண்டி. 2520

## பெயர் மாற்றம்

சின்னத்துரை பிறைகுடி என்ற பெயரை இன்று தொடக்கம் சின்னத்துரை ஜெகதீசன் எனப் பாவித்து வருகிறேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகிறேன்.

சி. ஜெகதீசன்

ஆடியபாத றேட், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 2588

## தராசுபடிக்கு சில் வைப்பர்

யாழ்ப்பாணம்)
உடுவில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இம் மாதம் 22ம் திகதி தராசுபடிகளுக்கு சில் வைக்கப்படவிருக்கிறது.


**Diploma in Draughtsmanship**

இதற்கான புதிய வகுப்பு 14—3—82 ஞாயிறு ஆரம்பமாகியுள்ளது

விபரங்கட்கு:

**JASE INSTITUTES**

(Opp. Bank of Ceylon)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

2577


## திருமண அழைப்பு

மணமகன் **செல்வன் ஹரிகரன்**
(Accountant U. K.)

மணமகள் **செல்வி விமலாதேவி**
(Medical Officer, General Hospital Jaffna)

மணநாள் துர்மதி - பங்குனி - 7ம் நாள் (20-3-82) சனிக்கிழமை.

மங்கலநாண் பூணல் முற்பகல் 10-30மணி தொடக்கம் 11-30 மணி வரை.

இடம் செல்வச் சந்நிதி முருகன் கோவில் தொண்டமனாறு

திருமண வைபவத்திற்கு வருகைதந்து வாழ்த்திச் சிறப்பிக்குமாறு உற்றார் உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்

நடேசரத்தினம் மயில்வாகனம் (மணமகனின் தந்தை)
உடையார் வளவு, இமையாணன், உடுப்பிட்டி.

திருமதி வ. இலங்கைநாயகம்
யாழ்ப்பாணம் கச்சேரி முன்னைநாள் O A யின் பாரியார் (மணமகளின் தாயார்)
''சாந்தம்'' ஆதிமயிலிட்டி, காங்கேசன்துறை.

2587

## சிவநேசன் கொலைவழக்கு விசாரணை:

# மேல் நீதிமன்றத்தில் தமிழில் நடைபெறும்

(கொழும்பு)
கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கு விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தமிழில் நடைபெறும்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அரசு தரப்பு சட்டத்தரணி இதனைத் தெரிவித்தைத் தொடர்ந்து இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் தமிழில் நடத்தவேண்டுமென்ற தமது மனுவை சட்டத்தரணி திரு வி. எஸ். ஏ. பிள்ளைநாயகம் நேற்று வாபஸ் பெற்றார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்களான பரிந்தாரணசிங்காஆனந்தடிசில்வா எச். டி. தம்பையா ஆகியோர் முன்னிலையில் இம்மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது திரு. புள்ளேநாயகத்தின் வாதத்தையடுத்து 15 நிமிட அவகாசம் கோரிய அரசு சட்டத்தரணி இப்படித் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து திரு. புள்ளேநாயகம் தாம் மனுவைவாபஸ் பெறுவதாகத் தெரிவிக்கவும நீதிமன்றம் மனுவைதள்ளுபடி செய்தது. (இ ம)

## இன்றைய காட்சியில் நோர்வே தூதர்

(பண்டத்தரிப்பு)
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறுவரும் வளர்ச்சிக்காண் தொழில் நுட்ப கைத்தொழில் விவசாயக்கண்காட்சியின் ஐந்தாவது தினமான நாளைய கண்காட்சியை நோர்வே நாட்டுத் தூதுவர் திரு. ஸ்ரீனர் ஸ்க்ஜேவிலான்ட் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு திறந்துவைப்பார்.

இறுதித்தினமான அடுத்த நாள் சனிக்கிழமைக்காட்சியை லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் சுனில் வட்டவல்ல பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைப்பார்.

## இன்றைய காட்சியில்

ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவினுல் பாராட்டப்பட்ட பிரபல மஜிக், மாய வித்தை நிபுணரான டாக்டர் சிவாஸ்கோவின் மாயாஜால வித்தைகள் இன்றைய கண்காட்சியில் இடம்பெறும்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் குரு௫சர் ஒழுங்கை 68ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் கதிரவேலுப்பிள்ளை என்பவரது மரண சாதனமில்லாச் சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

வழ. இல: ரி/3648

கதிரவேலுப்பிள்ளை கைம்பெண் லீலாவதி அல்லது பத்மாவதி, 68 குரு௫சர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982 ம் ஆண்டு சித்திரை மாதம் 23ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றுள தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1981ம் ஆண்டு மார்கழி மாதம் 15 ம் திகதி

மன்றின் சட்டளைப்படி
தா. குலஞானம்
(ஒப்பம்)
பதிவாளர்

வரைதல்
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி
2573

## கை மெய்யாக பிடிபட்டார்

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்புச் சந்தையில் விடப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றைத் திருடிச்சென்று அதனைச்சுழிபுரத்திலுள்ள வீடு ஒன்றில் வைத்து அதன் உறுப்புகளை மாற்றிக்கொண்டிருந்த நபர் ஒருவர் கையும்மெய்யுமாக பிடிக்கப்பட்டு காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். [அ]

## கிராமோதயசபைத் தலைவர்கள்

(சரவணை)
வேலணை உதவி அரசாங்க பிரிவைச்சேர்ந்த சரவணைக் கிராமோதய சபையின் தலைவராக பண்டிதர் திரு. க இராசையா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

● ● ●

(பண்டத்தரிப்பு)
பெரிய விளான் கிராமோதய சபை தலைவராக மாதகல் கிராமசேவை அலுவலர் திரு. எஸ். பிரான்சிஸ் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## ''தொடர்ச்சியான பயிற்சிமூலமே சாதனைகளை நிலைநாட்டலாம்''

—யாழ். சிறை அத்தியட்சகர்

(அரியாலை)
''நான் வகிக்கும் பதவியில் பாராட்டசமற்ற தீர்மானம் எடுக்கவும், எடுத்த தீர்மானங்களை எவருக்கும் அஞ்சாமல் செயல்படுத்தவும் நான் பெற்றுள்ள திறமைகளுக்கு எனது பாடசாலை நாட்களில் நான் விளையாட்டுத்துறையில் காட்டிய ஆர்வமும், ஈடுபாடும் பிற விளையாட்டுக் கழகங்களில் இணைந்து கழகங்களின் வெற்றிக்காகப் போட்டியிட்டமையுமே காரணமாகும். இது போன்ற அனுபவங்களைப்பெற பாடசாலை வழங்கும் சகல வாய்ப்புக்களையும் மாணவர்கள் தவறாது பயன்படுத்த வேண்டும்.''

இவ்வாறு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்தமெய்வல்லுநர் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் திரு. ச. சத்தியமூர்த்தி பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலயஅதிபர் தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் திரு. சத்தியமூர்த்தி தொடர்ந்து பேசுகையில், தாம் கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தில் மேற்கொண்ட தொடர்ச்சியான பயிற்சியின் மூலமே அன்று நானூறு மீற்றர் ஓட்டத்திலும், நானூறு, இருநூறு மீற்றர் அஞ்சல் ஓட்டங்களிலும் சாதனை நிலைநாட்ட முடிந்தது என்றும் மாணவர்கள் தொடர்ந்து பயிற்சிபெறுவதன் மூலமே சிறந்த வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் விளங்கி விளையாட்டுத்துறையில் புதிய சாதனைகளை நிலைநாட்ட முடியும் என்றும் குறிப்பிட்டார்.

போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான விருதுகளையும், கிண்ணங்களையும் திருமதி சத்தியமூர்த்தி வழங்கினர்.

## இன்றைய இசை விழாவில்

(யாழ்ப்பாணம்)
இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் பத்தாம் நாள் இசை விழா நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றன.

இன்றைய நிகழ்ச்சிகள், மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நடைபெறும்.

திருமதி இலக்குமிதேவி பாலகிட்ணர், திரு. பொன். சுபாஸ் சந்திரன் ஆகியோரின் இசைக் கச்சேரியும், சதங்கை நர்த்தனலயம் திருமதி லீலா ஆறுமுகையாவின் மாணவிகள பரதநாட்டிய நிகழ்ச்சியும்இன்றைய நிகழ்ச்சிகளில் இடம்பெறவுள்ளன. (கி)

## உற்சவம்

(சரவணை)
புங்குடுதீவு மடத்துவெளி, ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.


**New Admissions**

**Jaffna College Technical Institute**

New Sessions begin 10th may 1982. Classes for Technicians and Craftsmen.

Applications close 16th April 1982.

Application forms and other particulars are available at the Office.

Director
Jaffna College Technical Institute,
Vaddukoddai.

2589



புத்தாண்டு தினத்தை முன்னிட்டு குறைந்தசலார் ஸ்ருடியோ டில்கா 202, ஆஸ்பத்திரி வீதி, பஸ்நிலையம் முன் யாழ்ப்பாணம்

"வடக்கு, கிழக்கில் நிகழ்ந்தசம்பவங்கள்:

# நாட்டின் எப்பகுதியில் விசாரித்தாலும்பதிவுதமிழில்'

## அப்பீல் நீதிமன்றம் தீர்ப்பு

[கொழும்பு]

"தமிழ் நீதிமன்ற நிருவாக மொழியாகவுள்ள வடக்கு, கிழக்கு மாகாணச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகள் நாட்டின் வடக்கு, கிழக்குத் தவிர்ந்த பகுதியில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போதும், அந்த வழக்கு விசாரணைகள் முழுவதும் தமிழிலேயே நடாத்தப்படவேண்டும் என அப்பீல் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

குட்டிமணி, ஜெகன், கறுப்பன் ஆகியோருக்கு எதிரான கான்ஸ்டபிள் சிவநேசன் கொலைவழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைசெய்யப்பட இருப்பதை ஆட்சேபித்தும் வழக்கு விசாரணை சிங்களத்தில் பதியப்படுவதை ஆட்சேபித்தும் தாக்கலான மனுவின்விசாரணையின்போதே இததீர்ப்பு வழங்கப்பட்டது.

மனுதார் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி வி. எஸ். ஏ. புள்ளேநாயகம் ஆஜராகி வாதாடுகையில் "பிரஸ்தாப கொலைச்சம்பவம் யாழ். நீதிமன்ற எல்லைக்குள் நடந்திருப்பதாகவும், எதிரிகளும் சாட்சிகளும் அப்பகுதியைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் வழக்கு விசாரணை யாழ். நீதிமன்றத்திலேயே நடத்தப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

அரச சட்டத்தரணி வாதாடுகையில் "அரசமைப்பின்படி வடக்கு, கிழக்கில் நீதிமன்ற விசாரணைகள் தமிழில் நடத்தப்படுவதுடன். பதிவேடுகள் தமிழில் வைக்கப்படுகின்றன. ஆனல் கொழும்பில் நடக்கும் ஒரு வழக்கில் எதிரி தரப்பில் வேண்டுகோள் விடுக்கும்பட்சத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு வசதி செய்யப்படுகிறது. மேல் நீதிமன்றம் இலங்கை முழுவதும் நியாயாதிக்க கொண்டிருக்கிறது. ஒவ்வொரு பகுதியில் அமைந்துள்ள நீதிமன்றங்களுக்கு ஊடாக அந்த நியாயாதிக்கத்தைச் செலுக்கிறது. வடக்கு, கிழக்கில் நடைபெற்ற வழக்குகளைக் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் விசாரிக்கலாம். வடக்கு, கிழக்கில் உபயோகிக்கப்படும் மொழி இங்கு செல்லுபடியாகும்" எனத் தெரிவித்தார்.

இவரது வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி மனுதார் தரப்பின் மனுவைத் தள்ளுபடிசெய்து மேற்படி தீர்ப்பை வழங்கினர். (கு)

## மட்டக்களப்புவீரரின்உணவில் நஞ்சுகலந்திருக்கவில்லை

### இரசாயன பகுப்பாய்வாளர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு உதைபந்தாட்ட வீரர்களுக்கு யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்ட உணவில் நச்சுத்தன்மை எதுவும் இருக்கவில்லை என அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் தெரிவித்துள்ளார்.

கடந்தமாதம் 6-ம் திகதி மட்டக்களப்பு வீரர்களுக்கும் யாழ். வீரர்களுக்குமிடையில் யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்டப் போட்டி நடைபெற இருந்ததும் இங்குவந்த மட்டக்களப்பு வீரர்கள் உணவுச்சாலை ஒன்றில் உணவு உண்டபின் மட்டக்களப்பு வீரர்களில் மூவர் திடீரெனச் சுகவீனமடைந்ததை தொடர்ந்துஉதைபந்தாட்டப் போட்டி ரத்துச்செய்யப்பட்டதும் தெரிந்ததே.

இதுதொடர்பாக பாராளுமன்றத்தில் பொத்துவில் இரண்டாவது எம். பி.திருமதி ரங்கநாயகி பத்மநாதன் கேள்வி எழுப்பியிருந்தார். மட்டக்களப்பு விளையாட்டு வீரர்கள் உண்ட உணவில் நஞ்சுகலக்கப்பட்டிருக்கலாம் எனச் சிலர் சந்தேகம் தெரிவித்திருந்தனர். இக்கூற்றை யாழ். உதைபந்தாட்டச் சங்கமும், இவ்வுதைபந்தாட்டப் போட்டியை ஒழுங்குசெய்த யாழ். உத்தியோகத்தர்களும் மறுத்துவந்தது வாசகர்கள் அறிந்ததே. (கு)


மிகவும் குறைந்த.
விசேட
விமானக் கட்டணங்கள்
யாழ்ப்பாணத்தில்
மக்கிஞென்ஸ் வழங்குகிறது
★ சிங்கப்பூர் கூட்டாகச் செல்வோருக்கு
(GROUP TICKETS) மிகவும் கூடிய கழிவுடன்
மற்றும் ∘° மத்திய கிழக்கு °∘ லண்டன்
உலகின் எப்பாகத்துக்கும்
விரும்பிய விமானத்தில்
விமான டிக்கட்
∘° அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான
எம்மிடம்
வங்கியில் அறவிடும்
அதே கட்டணத்தில்
பிரயாணக் காசோலைகள்
(TRAVELLERS CHEQUES)
நாடுங்கள்
மக்கிஞென்ஸ் ட்றவல்
சேவிஸ் (சிலோன்) லிமிட்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154


## பிலிப்பைன்ஸ் பயணமானர்



(யாழப்பாணம்)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வட பிரதேச முகாமையாளராய் கடமையாற்றியவரும், தற்போது இச்சபை வெளிநாட்டு உதவியுடன் நிர்மாணிக்கும் திட்டத்தில் பிரதம பொறியியலாளராகக் கடமையாற்றி வருபவருமான திரு சங்கரப்பிள்ளை பாலமுத்துசிங்கம் யாழ். பாரிய குடிநீர்த்திட்டம் சம்பந்தமாக கிரகித்தற்பயிற்சியைமேற்கொள்ளும் பொருட்டுபுலமைப்பரிசில்பெற்றுபிலிப்பைன்ஸ்பயணமானர். இவர் வட்டுக்கோட்டையைச்சேர்ந்த காலஞ்சென்ற முதலியார் ப. மு. சங்கரப்பிள்ளையினதும், திருமதி சங்கரப்பிள்ளையினதும் கனிஷ்டபுதல்வராவார்.

### கம்பன்விழா......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில் பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

மாலை நிகழ்ச்சிகளில் கவியரங்கமும் 'ஒரு நாள்' என்ற பொருளில் பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணனின் சொற்பொழிவும் நடைபெறும். [கி]

## கள்ளுத்தவறணையில் கத்திவெட்டு!

### 4 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(வேலணை)

கள்ளுத்தவறணையில் பேச்சு முற்றிக் கத்திவெட்டில் முடிந்தது. இச்சம்பவத்தில் கத்திவெட்டுக்கு இலக்கான நால்வர் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வேலணை தெற்கு கள்ளுத்தவறணையில் இடம்பெற்றது

கத்திவெட்டுக் காயங்களுக்கிலக்கான நால்வரும் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். வெட்டுக் காயங்களுக்கிலக்கான பரமேஸ்வரன், தனஞ்செயன், மனோகரன், சீவரத்தினம் ஆகிய நால்வரில் பரமேஸ்வரன், தனஞ்செயன் ஆகிய இருவரும் ஆபத்தான நிலையிலிருப்பதாகத் தெரிகிறது (அ)

### சந்தேகநபர்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என் ஸ்ரீகாந்த சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கோரியுள்ள பொலிசார் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தாம் அவ்விதம் கோருவதாக தமது அறிக்கையில் தெரிவிக்கவில்லை சட்டத்தை சரியாகக் குறிப்பிட பொலிசார் தவறிவிட்டனர். எனவே 1 ம் 2ம, சந்தேக நபர்களைக் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டுமெனக் கோரினர்.

ஏனைய சந்தேகநபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளும் சந்தேக நபர்களை பிணையில் செல்ல நீதிமன்று உத்தரவிட வேண்டுமென விண்ணப்பித்தனர்

சந்தேகநபர்கள் அனைவரையும் 24ந் திகதி வரைவிளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி திரு. ரி. கே. என். திலகன், அன்றைய தினம் ஒவ்வொரு சந்தேகநபர் தொடர்பாகவும் தனித்தனியான அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவேண்டுமென்றும் சட்டத்தைச் சரியாகக் குறிப்பிட்டுச் சட்டங்களின் நோக்கங்களுக்கமைய அவ்வறிக்கைகள் அமையவேண்டுமெனவும் உத்தரவிட்டார். இவ்வழக்கில் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான பி. கதிரவேலு, இ. சபேசன், திருமதி ச. இளங்கோவன், என். சண்முகநாதன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். பொலிஸ் தரப்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. பத்தவெல சமூகமளித்திருந்தார்.

### கச்சதீவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புக்கொடுத்து, திருச்சுருப ஆராதனைகளை நடத்தி உற்சவத்தை நிறைவேற்றிவைத்தார்.

கச்சதீவு உற்சவம் இம்மாதம் பதினொராம் திகதி ஆரம்பமாகி பதினன்காம் திகதி முடிவடையவிருந்த போதிலும் இராமேஸ்வரத்தில் 'காலரா' நோய் கண்டிருப்பதாக இலங்கை அரசு அறிவித்து, கச்சதீவு உற்சவத்தை இம்முறை ரத்துச்செய்திருந்தது தெரிந்ததே

ஆனலும் கச்சதீவு உற்சவம் வழமைபோல் நடைபெற்று முடிவடைந்திருக்கிறது

கச்சதீவு உற்சவம் ரத்துச் செய்யப்படுவதற்கு முன்னரே நெடுந்தீவைச் சேர்ந்த மூப்பர் ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளையும், அவரது சகோதரர் லியோ, மைத்துனர் ஆசிரியர் மரியநாயகம் மற்றும் மூப்பர் குடும்பத்தினர் ஆகியோர் கச்சதீவு சென்று புனித அந்தோனியார் ஆலயச்சுற்றுடலை சுத்தம் செய்வதில் ஈடுபட்டிருந்தனர் என்றும் பத்தாம் திகதிமுதல் பதின்மூன்ரும் திகதிவரை மூப்பர் குடும்பத்தினர் ஜெப ஆராதனை நடத்தினர் என்றும் இறுதிநாளான பதினன்காம் திகதி நெடுந்தீவுப் பங்குத்தந்தை பலிப்பூசையை ஒப்புக்கொடுத்துகலந்து கொள்ளவில்லை.

உற்சவத்தை நிறைவுசெய்ததாக அறிவிக்கப்பட்டது. வேறு அடியார்கள் எவரும்

### சிசுவை.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தை விட்டுப் பிறந்த இடமான கலட்டியிலுள்ள தனது தாய் தந்தையருடன் வசித்துவந்ததாகவும் இக்காலத்தில் தான் கர்ப்பமுற்றிருப்பதாக மாமியாருக்குத் தெரியக்கூடியதாக வயிற்றில் துணியை வைத்துக்கட்டி நடித்துவந்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது.

முல்லைத்தீவு டிஸ்பென்சரியில் ஆயுர்வேத டாக்டராகப் பணிபுரியும் இவது கணவர் ஏழு மாதமாக வீட்டுக்குவராதிருந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

### வடபிராந்திய.....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

லைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா இந்த மகாநாட்டைக் கூட்டுகின்றுர்,

இம்மகாநாட்டில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறப்பினர்கள், மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர், அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள். இம் மகாநாட்டில் போக்குவரத்துச் சேவைகளை மேலும் அபிவிருத்திசெய்வது பற்றிக் கலந்துரையாடப்படும்.

#### விழாநிகழ்ச்சிகள்

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பஸ் பிரயாணச் சீட்டின்மீதான மாதாந்த பரிசு வழங்கும் திட்டத்தைக் குறிக்குமுகமாக நடைபெறும் விழாவிலும் முதன்மை விருந்தினராக அமைச்சர் கலந்துகொள்வார். சிறப்புவிருந்தினராக இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவரும், போக்குவரத்துசபைகள் அமைச்சின் செயலாளருமான வைத்திய கலாநிதி காமினி சி. விஜேசேகரா கலந்துகொள்வார்.

#### மாட்டுவண்டி சவாரி

ஞாயிற்றுக்கிழமை காலை ஆறுமணிக்கு யாழ். மாநகர சபை முன்பாக 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியுடன் பரிசளிப்பு விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன.

காலை ஏழு மணிக்கு மணிக்கூட்டுக் கோபுரம் முன்பாக அங்கவீனர்களுக்கான இரண்டு மைல்தூர முச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி நடைபெறும். பகல் இரண்டு மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபம் முன்பாக மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி ஆரம்பமாகும்.

யாழ். திறந்த வெளியரங்கில் நடைபெறும் மாலை கலை நிகழ்ச்சிகளில் பரிசளிப்பு வைபவத்துடன் பரதநாட்டியம் இசைநிகழ்ச்சி ஆகியனவும் இடம் பெறும்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் மார்ச் மீ 19 ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. The General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna தொலைபேசி: 77 07, 889, 8126.